பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா.7.00




சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | சித்திரை 23 | புதன்கிழமை | (05-05-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 138

## இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையை உடனடியாக புலிகளிடம் வழங்க வேண்டும்

### எரிக் சோல்ஹெய்மிடம் கூட்டமைப்பு எம்.பிகள் நேரில் வலியுறுத்து

(கொழும்பு)

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சோல்ஹெய்ம் தலைமையிலான நோர்வே குழுவினரை தமிழ் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு நேற்றுச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளது.

இச் சந்திப்பு கொழும்பில் உள்ள நோர்வே தூதரகத்தில் மாலை 4 மணிமுதல் 5.15 மணிவரை இடம் பெற்றது.

இச்சந்திப்பின் போது சமாதான முயற்சிகள் குறித்து கூட்டமைப்பு எம்.பிககள், எரிக்சோல்ஹெய்முடன் விரிவாகப் பேச்சு நடத்தியுள்ளனர்.

இதன்போது சமாதான முயற்சிகளை, தமிழ்மக்கள் நம்பிக்கையுடன் ஏற்றுக்கொள்ளும் வகையில் அவர்களை சமாதானத்தின் மீது நம்பிக்கை கொள்ளவைக்கும் வகையில் மிக விரைவாக வடக்கு-கிழக்கிற்கான இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை விடுதலைப புலிகளிடம் வழங்க வேண்டும் என்று கூட்டமைப்பு எம்.பிக்கள் சோல்ஹெய்மிடம் வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

அத்துடன் இனப்பிரச்சினைக்கு தீர்வாக சமாதானப் பேச்சுவார்த்தைகளை தமிழ் மக்களின் ஏக பிரதிநிகளான விடுதலைப் புலிகளுடன் மிக விரைவாக அரசாங்கம் ஆரம்பிக் வேண்டும் என்றும் சமாதான முயற்சிகளை தொடர்வதில் ஜனாதிபதி பொறுப்புள்ளவராக இருக்க வேண்டும் என்பதையும் கூட்டமைப்பு எம்.பிக்கள தெளிவாக வலியுறுத்தி கூறினர்.

மேலும் ஜனாதிபதியின் சமாதான முயற்சிகளை வரவேற்ற கூட்டமைப்

(12ம் பக்கம் பார்க்க)

### எரிக்சோல்ஹெய்ம் இந்தியத் தூதுவர் சந்திப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் சமாதான முயற்சியின் ஆரம்பப்படி நிலை தொடர்பாக நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் தலைமையிலான குழுவினர் நேற்று இந்திய உயர் ஸ்தானிகர் நிருபன் சென்னை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இச்சந்திப்பின் போது இனப் பிரசசினை தீரவு தொடர்பான அரசினதும், புலிகளினதும் நிலைப்பாடுகள் குறித்து நோர்வே தூதுக் குழுவினர் இந்திய ஸ்தானிகருக்கு கூறியுள்ளனர். (ம)

# இலங்கையில் பேச்சை நடத்த விடுதலைப் புலிகள் மறுப்பு !

## தூதுவர் எரிக்சோல் ஜனாதிபதிக்கு அறிவிப்பு

(நமது நிருபர்)

**இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையின் அடிப்படையில், சமாதான பேச்சுவார்த்தைகள் இலங்கையில் அல்லாது வெளிநாடு ஒன்றிலேயே நடத்தப்பட வேண்டும் என்ற விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஊடாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிடம் தெரிவித்துள்ளதாக நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் கூறியுள்ளார்.**

சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பான ஜனாதிபதியின் விசேட செய்தியுடன் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை நேற்று முன்தினம் கிளிநொச்சியில் நோர்வேயின் சிறப்பு தூதுவர் எரிக் சோல்ஹெய்ம் தலைமையிலான குழுவினர் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இக் கலந்துரையாடலைத் தொடர்ந்து உடனடியாக கொழும்பு திரும்பிய எரிக்சோல்ஹெய்ம் விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை நுவரெலியாவில் தங்கியிருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கு வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஊடாக அறிவித்தார்.

சமாதான முயற்சி தொடர்பாக ஜனாதிபதியின் விசேட செய்தியை விடுதலைப் புலிகளுக்கு அறிவித்தபோது தமிழ்ச்செல்வன் ஜனாதிபதியின் சமாதான முயற்சிக்கு எந்த விதமான எதிர்ப்பையும் காட்டவில்லை

சமாதான முயற்சிகள் ஏற்கனவே இடம்பெற்ற ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக விடுதலைப் புலிகளினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைகால தன்னாட்சி அதிகார சபைத்திட்டத்தின் அடிப்படையிலேயே ஆரம்பிக்கப்பட வேண்டும். இப் பேச்சுவார்த்தைகள் யாவும் இலங்கையில் அன்றி வெளிநாடுகளிலேயே இடம்பெற வேண்டும் இதுவே விடுதலைப்

(12ம்பக்கம் பார்க்க)

### நோர்வேயின் அனுசரணை குறித்து ஜனாதிபதியை ஜே.வி.பி. சந்திக்கும்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை ஜே.வி.பியினர் நாளை சந்தித்து பேச்சு நடத்தவுள்ளனர்.

சமாதான முயற்சிகளை ஆரம்பிப்பதில் நோர்வேயின் அனுசரணைப்பணி எத்தகையது, அதன் எல்லை என்ன என்பது குறித்தே இச் சநதிப்பின் போது விவாதிக்கபட உள்ளது. சமாதான முன்னெடுப்பில் நோர்வே வரையறைக்கு அப்பால் செல்லக்கூடாது என்பதே ஜே.வி.பியின் கொள்கை. மேலும் சமாதான முன்முயற்சி என்ற பெயரில் நோர்வே இலங்கையின் உள் விவகாரத்தில் தலையிடுகிறது என்றும் ஜே.வி.பி குற்றம் சாட்டிவருகிறது.

இந் நிலையில் ஜனாதிபதியுடனான நாளைய சந்திப்பு ஜே.வி.பி சமாதான் முயற்சிகளுக்கு எதிரான காரசாரமான விவாதத்தில் ஈடுபடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. (இ-121)

### சமாதான முயற்சி உத்வேகம் பெறுகிறது நோர்வே வெளிவிவகார அமைச்சர் அடுத்தவாரம் இலங்கை வருகிறார்

(கிளிநொச்சி)

நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் அடுத்த வாரம் இலங்கைவர உள்ளார.

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையை மீளவும் ஆரம்பிப்பது தொடர்பான இரண்டாம் கட்ட நடவடிக்கையாகவே இவரின் வருகை அமையவுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது. இலங்கைவரும் இவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோரை சந்தித்து பேசவுள்ளார். இச் சந்திப்பை அடுத்து வன்னிக்குச் சென்று விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுடனும் சந்திப்பை மேற்கொள்ள உள்ளார்.

விடுதலைப் புலிகளுடனான சந்திப்பின் போது புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் பிரசன்னமாகி இருப்

(12ம் பக்கம் பார்க்க)

### புலிகளுக்கான பதில் விரைவில் அனுப்பப்படும் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினையின் தீர்வுக்கு ஜனாதிபதியினால் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான முயற்சிகள் தொடர்பாக விடுதலைப புலிகள, நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக் சோல்ஹெய்ம் மூலமாக தெரிவித்துள்ள கருத்துக்களை அரசு தீவிரமாக பரிசீலித்த பின் முடிவுகளை நோர்வே தூதுக்குழு மூலமாக விடுதலைப்

(12-ம் பக்கம் பார்க்க)

### கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நாளை மறுதினம் வன்னி வருகிறார்

(லண்டன்)

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வன்னிக்கு வரவுள்ளார். இவருடன் அவரது துணைவியார் அடேல் பாலசிங்கமும் வரவுள்ளார்.

நாளை லண்டனில் இருந்து புறப்படும் இவர்கள் நாளை மறுதினம் காலை கொழும்பை வந்தடைவர். அங்கிருந்து விசேட உலங்கு வானூர்தி மூலம் வன்னிக்கு வருகை தரவுள்ளனர்.

வன்னிக்கு வருகைதரும் பாலசிங்கம் தம்பதியினர் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை சந்தித்து தற்போதைய அரசியல் நிலை குறித்து கலந்துரையாடுவதுடன் சமாதான முன்னெடுப்புக்கள், ஒழுங்குகள் குறித்தும கலந்துரையாடுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(12-ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தாய் நாட்டை மீட்க உன்னத கோட்பாடுகளைக் கடைப்பிடிப்போம்

## ஜனாதிபதியின் விசாக பௌர்ணமி தினச் செய்தி

(கொழும்பு)

போரினால் சீரழிந்து போயுள்ள தாய் நாட்டை இக்கட்டான நிலையில் இருந்து மீட்டு நிலையான சமாதானத்தையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்தும் உன்னதக் கோட்பாட்டுடன் விசாக பௌர்ணமியை அனுஷ்டிப்பதற்கு அனைவரும் திடசங்கற்பம் பூண வேண்டும்.



அத்துடன், தீய செயல்களுக்கு மூலகாரணமாக அமைவது வறுமையே, எனவே வீண் விரயத்தை ஏற்படுத்தும் அநாவசிய அலங்காரங்கள், கேளிக்கை விளையாட்டுக்கள் போன்றவற்றை இயன்ற அளவுககுக் கட்டுப்படுத்தி தான, தர்ம, தியான நற்காரியங்களில் மக்கன் ஈடுபட வேண்டும்.

இவ்வாறு, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விசாக பௌர்ணமி தினத்தையொட்டி விடுத்துள்ள விசேட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி வெளியிட்ட அந்த அறிக்கையில் மேலும்,

2 ஆயிரத்து 500 ஆண்டுகளுக்கு முன்னர் கௌதம புத்தர் அருளிய போதனைகள் உள்ளத்தில் பேரொளியை ஏற்படுத்தி வாழ்கைகையை வழி நடத்தி வருகின்றது.

சமத்துவம் பற்றி உலகில் முதல் தடவையாக சிறந்த கருத்துக்களை முன் வைத்தவர் புத்த பெருமானாவார்.

அவர் போதித்த நெறிகள் சமயமாகவோ, தத்துவமாகவோ மாத்திரமன்றி வாழ்க்கையை வழி நடத்துவதறகான அடித்தளமாக அமைந்திருக்கின்றன.

பரிநிர்வாணம் என்ற முத்தி நிலையே பௌத்தத்தின் இறுதி நோக்கமான போதிலும் மனிதனின் உலோகாயுத வாழ்க்கையில் அபிவிருத்தி குறித்தும் அந்த நெறியில் கூறப்பட்டிருக்கின்றது என்றுள்ளது.

(உ-60,10)

# நெருக்கடிகளுக்குத் தீர்வுகாண புத்தரின் போதனைகள் உதவுகின்றன

## பிரதமரின் விசாக பௌர்ணமி தினச் செய்தி

(கொழும்பு)

சமத்துவம், திருப்தி, நடுநிலை, கருணை ஆகிய உன்னத குணங்களை விருத்தி செய்து சகல இன மக்கள் மத்தியிலும் நட்புறவையும், புரிந்துணர்வையும் வளர்த்துக் கொள்ள விசாக பௌர்ணமி தினத்தன்று திடசங்கற்பம் பூண வேண்டும் எனப் பிரதமா மகிந்தராஜபக்ஷ பௌத்த மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

விசாக பௌர்ணமி தினத்தையொட்டி வெளியிட்ட விசேட செய்தியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள செய்தியில் மேலும்,

இன்றைய உலகம் முரண்பாடுகளாலும், மோதல்களாலும் நிறைந்து கிடக்கின்றது.

புத்தபெருமான் போதித்த நெறிகள் இந்த நெருக்கடிகளுக்குத் தீர்வு காண உதவுகின்றன.

எனவே உடலாலும், உள்ளத்தாலும் மேற்கொள்ளும் நற்காரியங்களுடன் அனைத்து இலங்கை மக்களையும் ஒரே நோக்கில் அணி திரட்டக கூடிய நிகழ்ச்சிகளை விசாக நோன்மதி தினத்தில் செயற்படுத்த



வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.


(உ-60,10)

# மனித வாழ்க்கையில் வெற்றிபெற வழிகாட்டுபவர் புத்தபெருமான்

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில்

(கொழும்பு)

சமூகத்திற்கு ஊறுவிளைவிக்காமல தத்தமது வாழ்க்கையில்



வெற்றி கொள்ளும் வழிகளை பௌத்த மக்கள் அனைவரும் கடைப்பிடிப்பதன் மூலம் புத்தபெருமானைக் கௌரவிக்க முடியும் என எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கியதேசியக் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள விசாக பௌர்ணமி தினச் செய்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மனித வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு புத்த பெருமான் 8 கொள்கைளைப் போதித்திருக்கின்றதாகவும்,

எனவே அதன் வழி நடந்து வாழ்க்கை வளம் பெறச் செய்வதற்கு விசாக தினத்தில் அனைத்து பௌத்த மக்களும் திடசங்கற்பம் பூண வேண்டும் என்றும் ரணில் விக்கிரம சிங்க விடுத்துள்ள விசாக பௌர்ணமி தினச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ-60,10)

# கள்ளக் கடத்தலுக்கு கையூட்டு வழங்குவது தண்டனைக்குரிய குற்றம்

## காரைநகர் பிரதேசப் பொறுப்பாளர் எச்சரிக்கை

(காரைநகர்)

காரைநகரில் மேற்கொள்ளப்படும் அனைத்துச் சட்டவிரோத நடவடிக்கைகளும் உடன் நிறுத்தப்படுவதுடன் பச்சை மரங்கள், மணல் என்பன காரைநகரை விட்டு வெளியே கொண்டுசெல்ல முற்றாகத் தடை விதிக்கப்படல் வேண்டும்.இதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளாா விடுதலைப்புலிகளின் காரைநகர் பிரதேச பெறுப்பாளர் கானகன.

அண்மையில் காரைநகர் பிரதேச செயலர் வே.சாம்பசிவம் தலைமையில் கிராம சேவையாளர்கள், சமுாத்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் பங்கு பற்றிய கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் உரையாற்றுகையில்,

காரைநகரில் சில பொதுமக்கள் சட்டவிரோதமான செயல்களில் ஈடுபடுவதுடன் ஆட்கள் இல்லாத வீடுகளின் கதவுகள்,மரங்கள், பச்சை மரங்கள் என்பவற்றையும் கடத்தி வருகின்றனா. இதன் மூலம் எமது இயற்கை வளம் முற்றாக அழிந்து வருகின்றது.

கடத்தல் செயற்பாடுகளிற்காக சிலர் படையினருக்கு கையூட்டு கொடுத்து வருகின்றனர். இவ்வாறு நடந்து கொள்வது தண்டனைக்குரிய குற்றம். இதனைத் தடுப்பதற்கு அரச அதிகாரிகள் அனைவரும் ஒத்துழைக்கவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

(உ-246)

மட்டு.- அம்பாறை அபிவிருத்தி தொடர்பில்

# கூட்டமைப்பு எம்.பிக்கள் புலிகளின் பிரமுகர்கள் சந்திப்பு

(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு -அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு -அம்பாறை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் கௌசல்யனுக்குமிடையில் நேற்று முன்தினம் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

கொக்கட்டிச்சோலையில் உள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடல் நிகழ்வில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான த. கனகசபை, த. தங்கேஸ்வரி, எஸ். ஜெயநந்தமூர்த்தி, க. பத்மநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அபிவிருத்தி தொடர்பாகவே இந்தக் கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினா் ஒருவா தெரிவித்தார்.

(உ-61,10)

# கிராம உத்தியோகத்தர்கள் சங்க வருடாந்த மாநாடு

## வவுனியாவில் இடம்பெற்றது

(வவுனியா)

மீளக் குடியேறியவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தக் கூடியவர்களாக கிராம உத்தியோகத்தர்கள் விளங்கவேண்டும் என வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் கேகணேஷ தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாண கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் வருடாநத மாநாட்டில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இதனைத் தெரிவிததார்.

அவர் அங்கு தொடர்ந்தும் பேசுகையில்,

போர் நிறுத்த உடன்படிக்கை ஏற்பட்ட பின்னர், மீளக்குடியேற முனையும் மக்களுக்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்க வேண்டியவர்கள் கிராம உத்தியோகத்தர்களே என்றார்.

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் தாய்ச் சங்கத் தலைவர் பி. வாசுகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, அமபாறை உள்ளிட்ட வடக்கு -கிழக்கின் சகல மாவட்டங்களைச் சேர்ந்த கிராம சேவையாளர் சங்கப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

இதேவேளை, போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மக்களை மீளக்குடியமர்த்தும் போது தாம் எதிர்நோக்கும் கஷ்டங்களையும் சவால்களையும் கிராம சேவையாளா சங்கப் பிரதிநிதிகள் அரச அதிபர்களிடம் எடுத்துக்கூறினர்.

(உ-61,10)

அரசியல் யாப்பு மறுசீராக்கல்

# அமைச்சின் ஆலோசகராக ஜெயம்பதி விக்ரமரட்ண

(கொழும்பு)

அரசியல் யாப்பு மறுசீராக்கல் அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகராக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, சட்டத் தரணி கலாநிதி ஜெயம்பதி விக்ரமரட்ணவை நியமித்துள்ளார்.

அத்துடன், பேராதனைப் பல்கலைககழக அரசியல்பீட விரிவுரையாளர் கலாநிதி ரஞ்சித் அமரசிங்க அமைச்சின் ஆலோசகராகவும், கொழும்புப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் லக்சிறி பெர்னாண்டோ நாட்டின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் அமைச்சின் சமாதானத் திட்டங்களுக்கான பணிப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, அரசியல் யாப்புச் சர்திருத்த ஆலோசனைக் குழுவுக்கு வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தலைமை தாங்குவதுடன் இந்தக் குழுவில் கல்விமான்கள் ஊடகத்துறை சார்ந்தோர், கலைஞர்கள் ஆகியோரும் அங்கம் வகிக்கின்றனர். (உ-121)

# பாலியல் நோய்களும் எதிர்கொள்ளும் வழிமுறைகளும்

(யாழ்ப்பாணம்)

"பாலயல் நோய்களும் அதனை எதிர்கொள்ளும் வழிமுறைகளும்" எனும் விடயம் தொடர்பான கருத்தரங்கொன்று நாளை வியாழக்கிழமை மு.ப.10.30 மணிக்கு யாழ்ப்பாணம் 4ஆம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில், யாழ். போதனா வைதத்தியசாலை மகப்பேற்று வைத்தய நிபுணர் டாக்டர் ஜி.பவானி கருத்துரைகளை வழங்கவுள்ளார்.

இதன்போது பெண்களுக்கான நோயகள் மற்றும் பிரச்சினைகள் இவற்றினால் ஏற்படும் விளைவுகள், தாக்கம், இதற்கான விளக்கங்கள் கூறல், சநதேகங்களுக்கு விளக்கமளித்தல் போன்றன இடம்பெறவுள்ளன. (உ-18)

# 6 மாகாண சபைகளின் தேர்தல் ஒரே தினத்தில்

(இராஜகிரிய)

ஆறு மாகாண சபையின் தேர்தல்களையும் ஒரே தினத்தில் நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி ஊவா, சப்பிரகமுவ, மத்திய, மேற்கு, வட மத்திய மற்றும் தென் மாகாண சபைகளுக்கான தோதல்களை ஒரே தினத்தில் நடத்துவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

ஏற்கனவே வடமேல் மாகாண சபைகளின் தேர்தல் முடிந்து விட்ட சூழ்நிலையில், எஞ்சிய ஆறு மாகாண சபைகளுக்குமான தேர்தல் எதிர்வரும் ஜுலை மாதத்தில் இடம்பெறும் என தேர்தல் திணைக்களம் தெரிவித்திருக்கிறது.

(உ-4,63)

# மக்களவைத் தேர்தல் களம்

தேர்தல் களம் பற்றிய சிறப்பு நிகழ்ச்சித் தொகுதியில் தஞ்சாவூர், மதுரை, சிவகங்கை ஆகிய மூன்று மக்களவைத் தொகுதிகள் இடம்பெறுகின்றன.

சோழர் காலத் தலைநகரான தஞ்சாவூர் மக்களவைத் தொகுதியில், தஞ்சை, திருவையாறு, பாவநாசம், வலங்கைமான், திருவோணம், ஒரத்த நாடு ஆகிய 4 சட்டப்பேரவைத் தொகுதிகள் உள்ளன.

உலகப் பண்பாட்டுச் சின்னமான பிரகதீஸ்வரர் ஆலயம், தஞ்சைக்கு அழகு சேர்க்கும் வகையில் அமைந்துள்ளது.

இத் தொகுதியில் அ.இ.அ.தி.மு.க. வேட்பாளராகப் போட்டியிடும் கே.தங்கமுத்துவும் தி.மு.க.வேட்பாளராகப் போட்டியிடும் எஸ்.எஸ். பழனி மாணிக்கமும் கடந்த முறையும் இதே தொகுதியில் போட்டியிட்டவர்களே.

கலைக்கப்பட்ட மக்களவையின் உறுப்பினரான பழனி மாணிக்கத்தை எதிர்த்து மொத்தம 12 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள்.

தமிழ் நாட்டின் இரண்டாவது பெரிய நகரமான மதுரை பாண்டியர் காலத் தலைநகராக இருந்த புகழைக்கொண்டது.

மீனாட்சி - சுந்தரேஸ்வரர் ஆலயத்தைச் சுற்றி அமைந்துள்ள இம் மாநகரம் தமிழ் நாட்டுப் பண்பாட்டுச் சின்னமாகவுள்ளது.

இத்தொகுதியில் மொத்தம் போட்டியிடும் 15 வேட்பாளர்களில் கலைக்கப்பட்ட மக்களவையின் உறுப்பினரும் மார்க்ஸிட் கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளரான தி.மோகனுக்கும், அ.இ.அ.தி.மு.க வேட்பாளரான ஏ.கே.போஸுக்கும் இடையே தான் முக்கிய போட்டி,

ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி இத் தொகுதியில் மீண்டும் போட்டியிடுகிறார்.

மதுரை மேற்கு, மதுரை கிழக்கு, மதுரை மத்தி, திருப்பரங்குன்றம், மேலூர், சமய நல்லூர் ஆகிய 6 சட்டப் பேரவைத் தெகுதிகளைக் கொண்டதாக இத் தொகுதி அமைந்துள்ளது.

ஆங்கிலேயர்களுக்கு எதிரான நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் சிவகங்கைச் சீமைக்கு முக்கிய பங்கு உண்டு.

ஆங்கிலேய ஆட்சியாளர்களை எதிர்த்துப் போரிட்டு உயிர்த் தியாகம் செய்த மருது பாண்டிய சகோதரர்களின் புகழினைப் பரப்பும் இத் தொகுதியில் 12 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள்.

முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம், காங்கிரஸ் கட்சி வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார்.

இவரை எதிர்த்துப் போட்டியிடும் 11 பேர்களில், அ.இ.அ.தி.மு.கவின் எஸ்.பி.கறுப்பையா முக்கியமானவராவார்.

சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த சிவகங்கை, திருப்பத்தூர், இளையான் குடி, காரைக்குடி ஆகிய நாலு சட்டப்பேரவைத் தொகுதிகளும், இராமநாதபுர மாவட்டம் திருவாடானை மற்றும் புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் சட்டப்பேரவைத் தொகுதியும் இம் மக்கள வைத் தொகுதிக்குட்பட்டவை. (து)

# சென்னையில் சோனியா கருணாநிதி பிரசாரம்

(சென்னை)

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி சென்னை தீவுத் திடலில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 5.00க்குத் தேர்தல் பிரசாரப் பொதுக் கூட்டத்தில் பேசுகிறார். மே 5ஆம் திகதி பிரதமர் வாஜ்பாய், முதல்வர் ஜெயலலிதா பங்கேற்கும் கூட்டம் தீவுத் திடலில் நடக்கிறது. சோனியா பங்கேற்கும் கூட்டம் அதே இடத்தில் மே 6இல் நடப்பதாக இருந்தது. பிரதமரின் கூட்டம் முடிந்தவுடன் சோனியா கூட்டத்திற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கான அவகாசம் போதுமானதாக இருக்காது என்பதால் மே 7ற்கு கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

பிரதமர் கூட்டத்திற்கு அமைக்கப்படும் அதே மேடை காங்கிரஸ் கூட்டத்திற்கும் பயன்படுத்தப்படும். சோனியாவுடன் தி.மு.க.தலைவர் கருணாநிதியும் பொதுக்கூட்டத்தில் பங்கேற்கிறார். ஜனநாயக முற்போக்குக் கூட்டணியில் இடம் பெற்றுள்ள இதர கட்சிகளின் தலைவர்களும் இக் கூட்டத்தில் கலந்து கொள்கிறார்கள். (து)

**இந்தியச் செய்திகள்**

# ஐக்கிய மு. கூட்டணி சட்டப்பேரவை தேர்தலிலும் தொடரும் – கருணாநிதி

மக்களவைத் தேர்தலுக்காக தி.மு.க. தலைமையில் அமைக்கப்பட்டுள்ள ஜனநாயக முற்போக்குக் கூட்டணி, 2006 ஆம் ஆண்டு சட்டப் பேரவைத் தேர்தலுக்கும் நீடிக்கும் என்று தி.மு.க.தலைவர் மு.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக் காட்சியில் தொலைபேசி மூலமான கேள்வி - பதில் நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்ட அவர் மக்களவைத் தேர்தலுக்குப் பின் காங்கிரஸ் கூட்டணி அரசு அமைந்தால் அதில் தனது கட்சி இடம்பெறாது என்றும் கூறினார்.

வெளியிலிருந்து ஆதரவளிக்கும் என்று கூறிய அவர், இது தமது சொந்தக் கருத்து என்றும், இது பற்றிக் கட்சிதான் இறுதி முடிவு எடுக்கும் என்றார்.

தேர்தல் கருத்துக் கணிப்பில் தமக்கு நம்பிக்கை இல்லை என்றும் அவர் கூறினார்.

'இந்தியா ஒளிர்கிறது' என்ற விளம்பரம் பற்றிக் கருத்துத் தெரிவித்த அவர், இன்னமும் இலட்சக் கணக்கான மக்கள் ஒரு வேளைக்குக் கூட உணவின்றி வாடுவதாகக் குறிப்பிட்டார், இந்தியா வல்லரசாக இருப்பதை விட, நல் வல்லரசாக இருப்பதைத்தான் தான் விருப்புவதாகத் தெரிவித்தார்.(து)



ஜம்மு–காஷ்மீர் மாநிலத்தில் சர்வதேச எல்லைக்கோடுப் பகுதிகளைப் பார்வையிட கடந்த திங்கட்கிழமை வந்த குடியரசுத் தலைவர் அப்துல் கலாமை உதம்பூரில் வரவேற்ற மனநலம் குன்றிய சிறுவன்.

# ஊழல் நிறைந்தது தே.ஜ.கூட்டணி சோனியாகாந்தி குற்றச்சாட்டு

காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வருமேயானால் நாடு தழுவிய ஊழலுக்கு எதிரான இயக்கமொன்று மேற்கொள்ளப்படும் என்று அக் கட்சித் தலைவர் சோனியா காந்தி கூறியுள்ளார்.

பஞ்சாப் மாநிலத்தில் குருதாப்பூர் மக்களவைத் தொகுதியில் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் பா.ஜ.க.தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு பல்வேறு ஊழல்களுடன் தொடர்புடையதாகக் குற்றஞ்சாட்டினார்.

வாஜ்பாய் அரசின் கொள்கைகளினால் தலித்கள் மகளிர் உள்ளிட்ட அனைத்துத் தரப்பு மக்களும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், பா.ஜ. க.மதவாதக் கட்சி என்றும் அவர் குறைகூறினார்.

உத்தராஞ்சல் மாநில தலைநகரில் தேர்தல் பிரசாரக் கூட்டமொனறில் பேசிய சோனியாகாந்தி, வாக்காளர்களை ஈர்ப்பதற்காக பா.ஜ.க. பொய்யான வாக்குறிகளை வழங்கி வருவதாக அவர் குற்றஞ்சாட்டினார்.

தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொலைத் தொடர்பு துறைகளல் மேற்கொள்ளப்பட்டு வரும் சீரமைப்பு நடவடிக்கைகள் காங்கிரஸ கட்சியின் திட்டங்களின் தொடர்ச்சி என்று அவர் கூறினார். (து)

# வாஜ்பாய் அரசை நீக்குவது தேசிய கடமை – காங்கிரஸ்

மத்தியில் ஆட்சிப் பொறுப்பிலிருந்து தேசிய ஜனநாயகக் கூட்டணியை அகற்றுவதே காங்கிரஸ் கட்சியின் பிரதான குறிக்கோள் என்று அக் கட்சியின் செய்தித் தொடர்பாளர் ஆனந்சர்மா புதுடில்லியில் அண்மையில் செய்தியாளர்களிடம் கூறினார்.

ஆட்சியைப் பிடிப்பது தவிர, காங்கிரஸ் கட்சிக்குவேறு இலட்சியம் இல்லையென்று பிரதமர் வாஜ்பாய் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் தெரிவித்த குற்றச்சாட்டுக்கு ஆட்சேபம் தெரிவித்தார்.

வாஜபாய் அரசை நீக்குவதைத் தேசியக் கடமையாகக் காங்கிரஸ் கருதுகிறது என்றும், அவரது தலைமையின் கீழுள்ள தேசிய ஜனநாயகக் கூட்டணி கொள்கை ஒற்றுமை இல்லாத, பதவிக்கான சந்தர்ப்பவாதக் கூட்டணி என்றும் அவர் குற்றஞ்சாட்டினார். (து)

# புகைப் பிடித்தலுக்குத் தடை

## மத்திய அரசு விதித்தது

சிகரெட் மற்றும் புகையிலைப் பொருட்களுக்கான விளம்பரங்கள் 2 ஆம் திகதி முதல் தடைசெய்யப்பட்டுள்ளன.

மத்திய அரசு பிறப்பித்துள்ள உத்தரவின் படி தொலைக்காட்சி மற்றும் பத்திரிகைகள், இதர ஊடகங்கள் மற்றும் விளம்பரப் பலகைகளில் இந்தப் பொருட்களை வாங்கும் படி தூண்டுவது தடை செய்யப்படுகிறது.

நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ புகையிலைப் பொருட்கள் வியாபாரத்தைப் பெருக்கும் நோக்குடன் கலாசார நிகழ்ச்சிகளையோ, விளையாட்டுப் போட்டிகளையோ நடத்துவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் ரயில் நிலையங்கள், ரயில் பெட்டிகளில் புகை பிடிக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது இம் மாதம் 2ஆம் திகதி முதல் அமுலுக்கு வருவதாக ரயில்வே அமைச்சும் அறிவித்துள்ளது. மீறிப் புகை பிடிப்பவர்கள் 200 ரூபா அபராதம் செலுத்த நேரிடும்.

சென்ரல் ரயில் நிலையத்தில் செய்தியாளர்கள், பயணிகளிடம் இது பற்றிய கருத்துக்களைக் கேட்ட போது தடை விதித்திருப்பது நல்லது என்று தெரிவித்தார்கள். (து)

# லாலுபிரசாத் தொகுதியில் மறு வாக்குப் பதிவு

## ஆணையத்திடம் எதிர்க்கட்சிகள் கோரிக்கை

மகக்ளவைத் தேர்தலில் வரும் புதன் கிழமை நடைபெறவுள்ள 83 தொகுதிகளின் 4 ஆவது கட்ட வாக்குப்பதிவுக்கான பிரசாரம் உத்தரப் பிரதேசத்தில் பிரதமர் வாஜ்பாயின் லக்னோ தொகுதி உள்ளிட்ட 30 தொகுதிகளிலும், ராஜஸ்தானில் அனைத்து 25 தொகுதிகளிலும் பீஹார் மற்றும் மத்திய பிரதேசத்தில் தலா 12 தொகுதிகளிலும், அருணாசலப் பிரதேசத்தில் 2 தொகுதிகளிலும் ஜம்மு - காஷ்மீர் மற்றும் நாகலாந்தில் 1 தொகுதியிலும் முடிவடைந்துள்ளது.

பீஹாரில் ராஷ்ட்ரிய ஜனதா தள் தலைவர் லாலு பிரசாத் யாதவும், மத்திய துணை விமானப் போக்குவரத்து அமைச்சர் ராஜேஸ் பிரகாரூடி போட்டியிட்ட தொகுதியில் கடந்த் 26 ஆம் திகதி வாக்குபதிவின் போது நடைபெற்றதாகக் கூறப்பட்ட வன்முறைச் சம்பவங்கள் பற்றி தேர்தல் ஆணையப் பார்வையாளர் இருவர் சாதராவில் விசாரணைகளைத் துவக்கியுள்ளார்கள்.

இந்தப் பார்வையாளர்களை லாலுபிரசாத் யாதவும் அமைச்சர் ரூடியும் தனித்தனியே சந்தித்து விளக்கமளித்தார்கள்.

வாக்குப் பதிவின் போது அமைச்சர் ரூடியின் ஆதரவாளர்கள் ஒழுங்கீனம் புரிந்ததாகக் கூறி, அதன் தொடர்பான வீடியோப் படங்களை அதிகாரிகளிடம் கொடுத்தாகவும் சாதரா தொகுதி வாக்குப் பதிவு அமைதியாக நடந்தது என்றும் பின்னர் செய்தியாளர்களிடம் லாலு கூறினார்.

லாலுபிரசாத் தரப்பில் நடத்திய முறைகேடுகள் பற்றிய ஆதாரங்களை அதிகாரிகளிடம் வழங்கியதாகவும், இந்தத் தேர்தலை முற்றிலுமாகரத்து செய்யும்படி கேட்டுக் கொண்டதாகவும், அமைச்சர் ரூடி பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்தத் தொகுதியில் போட்டியிட்ட சமாஜவாதி பகுஜன் சமாஜ் வேட்பாளர்களும் தேர்தலை ரத்துச் செய்யுமாறு கோரியிருக்கிறார்கள்.

விசாரணை நடத்திய பார்வையாளர்களின் அறிக்கை கிடைத்த பின்னரே தேர்தல் ஆணையம் இறுதி முடிவு செய்யும்

சாதரா தொகுதியில் 79 வாக்குச் சாவடிகளில் மறு வாக்குப் பதிவு நடத்தும படி ஏற்கெனவே தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.(து)

# நேட்டோ மாநாட்டைத் தாக்கும் தீவிரவாதிகளின் திட்டம் துருக்கியில் முறியடிப்பு

(இஸ்ரான்புல்)

அடுத்தமாதம் 28,29ஆம் திகதிகளில் துருக்கியில் நடைபெறவுள்ள நேட்டோ உச்சி மாநாட்டின் போது பாரியகுண்டுத்தாக்குதல்களை நடாத்தி உலகத் தலைவர்களைக் கொல்வதற்குத் திட்டமிட்டிருந்த அன்ஸார்-அல்-இஸ்லாம் குழுவைச் சேர்ந்த 25 தீவிரவதிகளைத் துருக்கியப் பொலிஸார் கைது செய்தனர்.



அன்ஸார்-அல் -இஸ்லாம் குழு அல்-குவெய்டா இயக்கத்தின் ஒரு கிளை நிறுவனமென்று அறிவிக்கப்படுகிறது. கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து சக்திவாய்ந்த குண்டுகள் துப்பாக்கிகள் மற்றும் ஒஸாமாபின்லேடன் பயிற்சி வழங்கும் ஆயிரக் கணக்கான ஒளி நாடாக்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டன.

மேற்படி மாநாட்டிற்கு அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் தலைவர்களும் வருகைதர விருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. கடந்த நவம்பரில் இஸ்ரான்புலில் இடம்பெற்ற ட்ரக் குண்டுவெடிப்பில் 61பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

துருக்கியில் இருந்து வெளிவரும் செய்திகள் பற்றித் தாம் கவலைப்படவில்லை என்றும் திட்டமிட்டபடி நேட்டோ மாநாடு இஸ்ரான்புலில் நடைபெறும், அதற்கான பாதுகாப்பிற்கு துருக்கிய அதிகாரிகளே பொறுப்பு. அவர்களில் எமக்குப் பூரண நம்பிக்கை இருக்கிறதென்று நேட்டோவின் பேச்சாளர் அறிவித்துள்ளார்.

(யே)

# ஜப்பானியரை வருத்தும் தேசிய கீதமும் கொடியும்

(ரோக்கியோ)

ஒரு நாட்டின் தேசிய கீதமும் தேசியக் கொடியும் தேசப் பற்றின் பெருமைமிகு அடையாளங்களாகும். ஆனால் பல ஜப்பானியர்களுக்கு அவர்களது கொடியும் தேசிய கீதமும் அவமானச் சின்னங்களாகவும் வேதனை தருபவைகளாகவும் விளங்குகின்றது.



உதய சூரியன் சின்னத்துடனான தேசியக் கொடியும், "சக்கர வர்த்தியின் ஆட்சி" என்று தொடங்கும் தேசிய கீதமும் இரண்டாம் உலகப் போருக்குக் காரணமான மூன்று நாடுகளில் ஒன்றான ஜப்பானின் இராணுவ தேசியவாதத்தையும், அதன் அழிவுகளையும் நினைவுக்குக் கொண்டு வருவதால் பலர் அதனை வெறுக்கின்றனர்.

1999இல் முந்நாள் பிரதமர் கெய்ஸோ ஒபுச்சி புதிய சட்ட மூலம் ஒன்றினூடாக தேசிய கீதம்பாடும் போது அனைவரும் எழுந்து நிற்க வேண்டும் என்ற ஒழுங்கைக் கொண்டு வந்தார். இப்போதைய பிரதமர் யுனிச்சீரோ கொய்சூமி இச்சட்ட மூலத்தை பாவித்து ஆசிரியர்களைத் துன்புறுத்துவதாக அறிவிக்கப்படுகிறது.

(யே)

# பாகிஸ்தானில் குண்டு வெடிப்பு

(கராச்சி)

தென்மேறகுப் பாகிஸ்தானில் க்வாதர் துறைமுகம் அருகே திங்கட்கிழமை கார் குண்டு வெடித்ததில் சீனப் பொறியியலாளர்கள் மூன்று பேர் கொல்லப்பட்டனர். 11 பேர் காயமடைந்தனர். தீவிரவாதிகளின் வெறிச் செயலாக இது இருக்கலாம் என்று பொஸிஸார் சந்தேகிக்கின்றனர். கராச்சிக்கு மேற்கே 500கி.மீ தொலைவில் ஈரான் எல்லையருகே காலை 9.40 மணியளவில் இச்சம்பவம் நடந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதுகுறித்து க்வாதூ் தலைமைப் பொலிஸ் அதிகாரி சத்தார் லஸி கூறியதாவது க்வாதரில் பல கோடி ரூபாய் முதலீட்டில் கடல் துறைமுக கட்டுமானப் பணிகள் நடை பெற்று வருகின்றன. இக்கட்டுமானப் பணிகளை சீன இன்ஜினியறிங் துறைமுகக் கம்பனி மேற்பார்வையிட்டு வருகிறது. இந்நிறுவனத்தில் பொறியியலாளாகளும் தொழில்நுட்ப வல்லுநர்களும் சேர்ந்து 450 போ பணிபுரிகின்றனர்.

இவர்களில் 12 சீனப் பொறியியலாளர்களை ஏற்றிய பேருந்து காலை 9.40 மணியளவில் துறைமுகத்திற்கு சென்று கொண்டிருந்தது. அப்பேருந்து துறைமுகத்தை அடைந்தபோது கார் நிறுத்தும் இடத்தில் நிறுத்தப்பட்டிருந்த வெள்ளை நற சுஸுகி ஆட்டோ கார் ஒன்று திடீரென வெடித்துச்சிதறியது. இதில் 3பேர் கொல்லப்பட்டனரீ.11பேர் காயமடைந்தனர். இது தீவிரவாதிகளின் வெறிச் செயலாக இருக்கலாம் என்று அந்த அதிகாரி கூறினார்.

(யே)

## WORLD NEWS உலக தரிசனம்

# இரும்புப் பெண்

(லண்டன்)

இரும்புப் பெண் என்று பெயரெடுத்த பிரிட்டனின் முதலாவது பெண் பிரதமரும் 11 வருட காலம் பிரிட்டனை ஆட்சி செய்தவருமான மாகிரட் தட்சர் பதவியேறற 25வது வருட பூர்த்தி தினத்தை பிரிட்டனின் கொன்சர் வேடிவ் கட்சியினர் 'நேற்று முன் தினம் நாடு பூராவும் கொண்டாடினர்.

(யே)

# ஆயுதங்கள் அபகரிப்பு

(றியோ டி ஜெனீரோ)

பிரேஸிலின் தலைநகர் றியோ டி ஜெனீரோவிலுள்ள விமானப்படை ஆயுதக்களஞ்சியத்திலிருந்து பெருமளவு ஆயுதங்களை போதைப் பொருள் கடத்தல்காரர்கள் கொள்ளையிட்டு சென்றுள்ளனர்.



தலைநகரில் அடிக்கடி இடம்பெறும் இவ்வாறான ஆயுதக் கொள்ளைச் சம்பவங்களால் கடத்தல் காரர்களின் கை ஓங்க வருவதையிட்டு அரசாங்கம் கவலை கொண்டுள்ளதுடன் இராணுவத்தை அனுப்பி நகரை திடீச் சோதனையிடவும் எண்ணியுள்ளது.

கடந்தவாரம் தலைநகரின் சேரிப் பகுதியில் பொலிஸார் பெருமளவு ஆயுதங்களைக் கண்டுபிடித்தமை குறிப்பிடத்தக்கது.

(யே)

# அமெரிக்கக் கைதி தப்பித்தார்

(பக்தாத்)

கடந்த ஏப்ரல் 9ஆம் திகதி எண்ணெய் ஏற்றிச் சென்ற வாகனத் தொகுதியை ஈராக்கின் ஆயுததாரிகள் தாக்கியபொழுது அவர்களால் சிறைப் பிடிக்கப்பட்ட அமெரிக்க சாரதி தொமஸ் ஹமில் தீவிரவாதிகளின் பிடியிலிருந்து தப்பினார்.



தான் அடைத்து வைக்கப்பட்டிருந்த திக்ரித் நகரின் வீட்டிற்கு அருகால் இராணுவ வாகனங்கள் செல்லும் சத்தத்தைக் கேட்டுக் கதவை உடைத்துத் திறந்து கொண்டு சுமார்அரைமைல் தூரம் வீதி வழியாக ஓடினார். அவர் ஓடிவருவதை அவதானித்த அமெரிகக இராணுவத்தினர் அவரைப் பாதுகாப்பாக அழைத்துச் சென்றனர்.


அவரது கிராமமான மக்கொன்னில் இச் செய்தி மகிழ்சசியை அளித்துள்ளது. அமெரிக்க ஜனாதிபதி தான் ஆசுவாசமடைந்ததாக அறிவித்துள்ளார். தனது மனைவியுடன் ஈராக்கிலிருந்து தொமஸ் தொலைபேசியில் உரையாடி மகிழ்ந்தார்.

(யே)

# ஈராக்கிற்கு ஆஸி. படை

(சிட்னி)

ஈராக்கிற்குள் 40 பேர்



கொணட இராணுவப்பயிற்சி அணியை அவுஸ்திரேலியா அனுபபியுள்ளதாக அதன் பாதுகாப்பு அமைச்சர் றொபர்ட் ஹில திங்கட்கிழமை தெரிவித்தார்.

ஈராக்கில் ஏற்கெனவே உள்ள 850 வீரர்களுக்கு இக் குழு உதவும். இந்நிலையில் ஈராக்குக்கு அவுஸ்திரேலியா வீரர்களை அனுப்புவது அந் நாட்டு தேர்தலுக்கு முன்பு முக்கிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. ஈராக்கில் பணிமுடியும் வரை அவுஸ்திரேலியப் படைகள் தொடர்ந்தும் இருக்கும் என பிரதமர் ஹோவர்ட் கூறியுள்ளார். எனினும் இனி வீரர்கள் அனுபப்படமாட்டார்கள் எனவும் அவர் கூறியுள்ளார் . ஆனால் எதிர்க்கட்சித் தலைவரான மார்க லதம் தேர்தலில் தங்கஎது தொழிலாளர் கட்சி வென்றால் ஈராக்கிலிருந்து அவுஸ்திரேலியப் படைகளைத் திரும்பப் பெறுவோம் எனக் கூறியிருக்கிறார்.

(யே)

# அமெரிக்கா ஆராய்கிறது

(வாஷிங்டன்)

ஈராக்கியக் கைதிகள் நிர்வாணமக்கப்பட்டுக் கேவலப் படுத்



தப்பட்டது தொடர்பில் தனியார் துப்பறியும் நிறுவனங்களின் உறுப்பினர்களுக்குப் பங்குள்ளதா என்று பென்ரகன் ஆராய்ந்து வருவதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தனது விசேட செய்திக் குறிப்பு ஒன்றில் அறிவித்துள்ளது.

(யே)

# எரிமலை வெடிக்கும்

(நியூசிலாந்து)

நியூசிலாந்தின் தங்கிவாய் பிரதேசத்திலுள்ள 'றேப்பேஹு' எரிமலை இந்த வருடம் நவமபர் மாதம் வெடிதது்ச் சீறும் என்று எரிமலை ஆராய்ச்சியாளர்கள் அறிவித்துள்ளனர்.



நியூசிலாந்தின் வட பகுதித் தீவான நகாறாஹோ பிரதேசத்தில் அமைந்துள்ள இந்த எரிமலை புகையையும் மண்ணையும் வெளியேற்றத் தொடங்கியுள்ளதாகவும் சுமார் 3 வருடத்திற்கு ஒருமுறை வெடித்துச் சீறும் இம்மலை அமைந்துள்ள பிரதேசத்தில் வழமையான துர்நாற்றம் வீசத் தொடஙகியுள்ளதாகவும் அறிவிக்கப் படுகிறது.

1953இல் இது வெடித்தபோது தங்கிவாய் ரயில் பாலம் அடித்துச் செல்லப்பட்டது. சிறிது நேரம் இடம் பெற்ற இப் பூகம்பம்பற்றி அறியாத கடுகதி ரயில் ஒன்று இப்பாதையில் விபத்திற்குள்ளானதில் 151 பேர் உயிரிழந்தனர்.

(யே)

# தடை தளர்த்தும் நேபாளம்

(காத்மண்டு)

கடந்த மாதம் 8ஆம் திகதி முதல் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள் மீதான தடையை நேபாள மன்னர் தளர்த்தியுள்ளார்.



நேற்று முன்தினம் நடுஇரவிலிருந்து இத்தடை தளர்த்தப் பட்டுள்ளதாகவும் பொது மக்கள் தமது ஆர்ப்பாட்ட முயற்சிகளைக் கைவிட்டு அன்றாட அலுவல்களுக்குத் திரும்புமாறும் மன்னர் வேண்டுகோள் விடுத்தார்.

அடுத்துவரும் ஏப்ரல் மாதம் ஜனநாயகத் தேர்தல்கள் இடம் பெறுமென்றும் அதற்கான ஆயத்தங்கள் செய்யப்பட விருப்பதாகவும் மன்னர் அறிவித்துள்ளார்.

(யே)

# ஒன்றிணையும் தமிழர் பொருளாதாரம்

# அன்றும் இன்றும் - ஓர் ஒப்பீடு

பண்டைய காலத்தில் தமிழன் தன்னிறைவு அடைந்த பொருளாதாரத்தில் இருந்தான். அன்றைய தன்னிறைவு பொருளாதாரம் என்பது மனிதனுடைய அடிப்படைத் தேவைகளைப பூர்த்தி செய்பவனவாகவே இருந்தது. அக்கால மக்களின் வாழ்வில் ஆடம்பரங்களுக்கோ ஆன்மீக அனாவசிய செலவுக்கோ இடம் இருக்கவில்லை. மாறாக அமைதியான ஆன்மீக வாழ்க்கையையே கடைப் பிடித்தவர்களாக வாழ்ந்து வந்தார்கள்.

நம்நாடு இயற்கை வள நாடு மனித வாழ்வும், இயற்கையுடன் இயற்கையாய் பின்னிப்பிணைந திருந்திருந்ததால் செயற்கையாக எதையும் செய்ய வேண்டிய தேவை இருக்கவில்லை. பூமியைத் தாயாகவும், பிற நட்சத்திர கோள்களை மனிதனின் ஆதிக்க சக்தியாகவும் கொண்டு இறை பக்தியுடன் சுயகௌரவம், தன்மானம், எனத் தமிழர் நிம்மதியாக வாழ்ந்த வந்தார்கள்.

எம்மக்களின் பிரதான உணவு நெல் அரிசிச் சோறு என்பதனால் அன்று வேளாண்மை முதன்மைப படுத்தப்பட்டது. வேளாண்மை நிலங்களை வளமாக்கவும், அறுவடை செய்த கதிர்களை நெல் மணியாக்கி அவற்றை இடமாற்றம் செய்வதற்கும் காளை, எருது மாடுகள் பயன்படுத்தப்பட்டன. அத்துடன் பசுக்களைப் பட்டி கட்டி வீட்டு மிருகங்களாக வளர்த்து பால், தயிர், நெய் போன்றவற்றைப் பெற்று இயற்கை செல்வங்களாக இவற்றையே பொருளாதாரமாக்கினார்கள்.

இதுதவிர நீண்டகால, குறுகிய கால பயிர்ச் செய்கைகளாக சிறுதானியங்கள், காய்கறிகள், பழவகைகள், தென்னை வளம், பனை வளம் என தம் பொருளாதார விருத்தியை தேவைக்கேற்ப செய்து வந்தார்கள். அவற்றுக்கிடையில் பண்டமாற்றுப் பொருளாதாரமும் நடைமுறையில் இருந்தது.

இப்படி வாழ்ந்து வந்த ஈழத் தமிழர் வரலாற்றில் காலத்துக்கு காலம் இந்திய மன்னர்களின் படையெடுப்புக்கள் மற்றும் சிங்கள மன்னர்களின் ஆதிக்கங்கள் இருந்து வந்தபோதும் பொருளாதார ரீதியில் அடிப்படை மாற்றங்கள் என்று எதுவும் ஏற்படவில்லை.

1505ஆம் ஆண்டு ஐரோப்பிய அந்நியராக முதலில் போர்த்துக்கேயர் இலங்கைத் தீவுக்கு வந்தார்கள். தொடர்ந்து நெதர்லாந்து நாட்டவரான ஒல்லாந்தர் 1658இலும் அதனைத் தொடர்ந்து 1796 தொடக்கம் ஆங்கிலேயரும் மொத்தமாக 440 வருடங்கள் நம் நாட்டைக் கைப்பற்றி ஆட்சி செய்தார்கள். இதில் இறுதி 130 வருடங்கள் (1815-1945) ஆங்கிலேயர் தம் முழுக்கட்டுப்பாட்டில் இலங்கைத் தீவை வைத்திருந்தார்கள். இவ் அந்நியர் ஆட்சியால் பொருளாதார ரீதியில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டது மட்டுமன்றி கலாசார ரீதியான தாக்கங்களுக்கும் மக்கள் முகம் கொடுக்க வேண்டியிருந்தது. இதனால் மக்கள் வாழ்வியல் சற்றே மாற்றப்பட்டு இருந்தபோதும் அன்று மத, மொழி, பண்பாடுகளில் கடுமையான போக்கை நம்மவர்கள் கடைப் பிடித்து வந்தார்கள். அந்நியரின் பொருளாதார நலன்களுக்கு அடிபணியாது தம் சுயகௌரவ தன்மானத்திலேயே உறுதியாக நின்றார்கள். தொடர்ச்சியான அந்நியரின் ஆட்சியினால் தவிர்க்க முடியாத கல்வித் திட்டங்களையும் பொருளாதார நடைமுறைகளையும் பெறவேண்டியவர்களாக ஈழ மக்கள் தங்கள் நடவடிக்கைகளை தவிர்க்க இயலாது சற்று மாற ஆரம்பித்தார்கள். இதன் தொடர்ச்சியாக கல்வித் திட்டங்களிலும் பொருளாதார திட்டங்களிலும் குறிப்பாக தமிழ் மக்கள் மிகவும் வேகமாக வீறுநடைபோட ஆரம்பித்தார்கள். இக்கால கட்டத்தில் தான் இலங்கைக்கு பிரித்தானியர்களினால் சுயநாடாக இயங்க சுதந்திரம் 1948 இல் வழங்கப்பட்டது.

அன்று கல்வி, பொருளாதாரம் மற்றும் உயர் பதவிகளில் தமிழ் மக்கள் முன்னணியில் திகழ்ந்து வந்தார்கள். அரசியல் மட்டத்தில் இருந்த சிங்கள அரசியல்வாதிகள் தமிழனின் பெரும் முன்னேற்றங்களைப் பொறுக்க முடியாமல் இனத்துவேசப் பொறிகளைப் சிங்கள மக்களுக்கு புகட்டி தமிழ் மக்களுக்கு எதிரான இன அழிப்புத் திட்டங்களை ஊக்குவித்தார்கள். விளைவு தமிழர்களின் உயிர்கள், உடமைகள் அழிக்கப்பட்டன. கலாசார அத்துமீறல்கள் நடத்தப்பட்டது. பூர்வீக இடங்கள் திட்டமிட்டு சிங்கள இடமாக்கப்பட்டது. பொறுக்க முடியாத தமிழன் அறப்போர் நடத்தினான்! உண்ணாவிரதம் இருந்தான்!! ஊர்வலம் வந்தான்!!! நடந்தது என்ன? மீண்டும் மீண்டும் இன அழிப்பு - தீச்சுவாலை விட்டு எரிந்தது.

மதம் கொண்ட யானையை அடக்க இனியும் பாடிப்பயனில்லை என உணர்ந்த தமிழன் அறப்போரில் இருந்து ஆயுதப்போர் என்ற மார்க்கத்திற்கு படிக்கல் நாட்டினான். இன்று ஈழப்போராட்டம் பல தூண்கள் கொண்ட பாரிய மண்டபமாக உயர்ந்து நிற்கின்றது. தனித் தமிழீழம் நடாத்த அனைத்து தகுதிகளும் தமிழனுக்கு உண்டு என்ற அளவுக்கு வந்துவிட்ட நிலை இன்று.

இக்கால கட்டங்களில் தமிழர்கள் அரசியல் தஞ்சம் கோரி உலகெலாம் பரந்து பல்வேறு நாடுகளில் தம் காலடிகளைப் பதித்துள்ளார்கள். இன்று ஈழத்தில் நடந்த போராட்டங்களினால் விலை மதிப்பற்ற உயிர்களையும் உடமைகளையும் நாம் இழந்திருக்கின்றோம் மிகவும் துயரமான விடயம் இது. அதற்காக நாம் அடிபணிந்து குடியிழந்து போனவர்களாக இருக்கக் கூடாது. வானத்தில் உயர்ந்து ஓங்கி நிற்கின்ற மரங்களை அடாபுயல் வந்து அதன் கிளைகளை அடித்து முறித்து விடுவது உண்டு. முறிந்த கிளைகள் காலப்போக்கில் அந்த மரத்திற்கே உரமாகி விடுகின்றது. இதேபோல் தான் நாமும் எமது இழப்புக்களால் ஏற்பட்ட சொல்லொணாத் துயரத்தின் எதிரொலியாக அலை மோதும் பாரிய பொருளாதாரத் திட்டங்களைக் கட்டியெழுப்ப வேண்டும்.

ஈழத்தமிழர்களுக்கு இன்று ஓர் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. அனைத்துலக நாடுகளில் நாம் பரவி வாழ்கின்றோம். இப்பரவலானது தமிழனுக்குக் கிடைக்க ஓர் வாப்பிரசாகம்; 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என அன்று தமிழன் தீர்க்கதரிசனம் சொன்னான். அதை இன்று நியாயமாகக் காணமுடிகிறது.

எமக்கிடையில் பொருளாதாரத்திட்டங்கள் எவ்வளவு கட்டியெழுப் பப்படுகிறதோ அதற்கு மேலாக ஒருமைப்பாடு, ஒற்றுமைத் தன்மையும் இறுக்கமாக கடைப் பிடிக்கப்பட வேண்டும்.

புலம்பெயர் வாழ் மண்ணிலும் எமக்கிடையில் எத்தனை மோதல்கள் ஏற்படுகின்றன. இவை அனைத்தும் உடன் தடுக்கப்பட வேண்டும். இதற்கு உடன் பரிகாரம் காணவேண்டும். கட்டாக்காலி மாடுகளாக ஒரு சில தமிழ் இளைஞர் கூட்டம் வீதியோரங்களில் விதண்டா வாதங்கள் பேசி வீண்பொழுது போக்கி விசமத்தனங்களில் ஈடுபட்டு வருவது குறிப்பாக லண்டன், ஐரோப்பிய, வட அமெரிக்க நாடுகளில் பார்க்க முடிகிறது. இச் செயற்பாடுகள் முற்றாகத தடுககப்பட வேண்டும். எம்மவர்கள் முன்வந்து இத்தீய சக்திகளை எம்மத்தியில் இருந்து களைந்து எடுக்க வேண்டும்.

எமக்கிடையே ஓர் புதிய சமுதாயம் உருவாக்கப்பட வேண்டும். போட்டிகள் பொறாமைகள் வேண்டும் என்றால் வேறு நாட்டவனுடன்!! எமக்கிடையில் வேண்டாம். நாம் பாரம் பரிய கோட்பாடுகள் இரண்டு அவை வீரமும் வெற்றியும் தான் இன்று. இவ்விரண்டையும் உரிமைக்காக ஈழத்தில் எம் சகோதர, சகோதரிகள் தம்முயிர் பாராமல் தாய் நாடு காக்கப் போராடி வருகின்றார்கள்.

நாம் அந்நிய மண்ணில் வாழ்ந்தாலும், நம் தாய் நாட்டை மறந்தவர்களாக காலத்தைக் கழித்துவிடக் கூடாது. இலங்கைத் தீவை 430 வருடங்களாக ஆட்சி செய்த அந்நியர் தம் நன்மைக்காகவே அங்கு வந்தார்கள்.

அவர்கள் செய்த முன்னேற்றங்கள், அபிவிருத்தித் திட்டங்கள் எல்லாம் அவர்களின் சொந்த நன்மைக்காகவே செய்யப்பட்டது. இச்செயற்பாடுகள் எல்லாம் வயலுக்குப் பாய்ச்சிய நீர் புல்லுக்கு உதவியது என்றதொனியே ஒழிய நம் நாட்டிற்க செய்த சேவைகள் என்ற அர்த்தங்கள் எம்மால் காண முடியவில்லை.

அந்நியன் தன்மொழி, மதம் கலாசாரங்களைப் பெருமைப் படுத்தி அவற்றைக் குடியேற்ற நாடுகளில் எப்படித்திணிக்க முற்பட்டான் என்பதை நாம் வரலாறுகளில் படித்துள்ளோம். தமிழ், சிங்களம் மொழிகளை ஆங்கிலேயன் நன்றாகக் கற்ற பின் அதன் மூலமாக தன் ஆங்கில மொழியை தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இலக்கணத்துடன் கற்பித்தான்.

இது வரலாறு. இதற்கு ஆங்கிலேயன் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பான் என்பதை அறிய வேண்டும். இப்படி மொழிப் பற்று, இனப்பற்று என மனிதன் பிறப்பின் அடையாளத்தை முத்திரையாகப் பதிக்க பல்வேறு பாடுகள்படுகிறான். உலகில் நாமும் இதற்கு விதிவிலக்காக இருந்து விடக்கூடாது.

தமிழ் மொழியைத் தரக் குறைவாய் நினைக்கும் தமிழனே நில்! எழுத எழுத்தின்றி இலக்கண வடிவமின்றி இலக்கிய வரலாறுகள் இன்றி எத்தனை இனம் இவ்வுலகில்? இருப்பினும் அவ்வினங்கள் தன்னினமே பொன் இனமென, தலை நிமிர்ந்து வாழ்கின்றார்கள். தமிழ் மொழி பற்றி தமிழனுக்குச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. ஆனால், தாய் மொழியை இழிவாக நினைக்கும் அளவுக்கு நாம் அறிவு குறைந்த ஜீவிகளாக இருந்துவிடக்கூடாது.

மொழிப்பற்றும் நாட்டுப் பற்றுக்கு ஓர் மூலாதாரமே. நாட்டுப்பற்று இருந்தால் தான் நாட்டை முன்னேற்ற வேண்டும் என்ற சிந்தனை வரும். புலம்பெயர் வாழ் மக்கள் நாட்டைக் கட்டி எழுப்ப வேண்டுமென்றால் பாரிய பொருளாதாரத் திட்டங்களுக்கு வழிவகுக்க வேண்டும்.

இன்று உலக நாடுகளின் அரசியல் பொருளாதாரத் திட்டங்களைத் தம் கட்டுப்பாட்டுகளில் வைத்திருக்கும் இனம் யூத இனம். இவர்கள் தங்கள் இனத்தவரான - யேசுபிரானை காட்டிக்கொடுத்தார்கள் என்பதற்காக 2000 வருடங்களுக்கு முன் தங்கள் சொந்த நாடான இஸ்ரேலில் இருந்து விரட்டி அடிக்கப்பட்டார்கள்.

நாடிழந்து உலகம் முழுவதும் அகதிகளாக வாழ்விடம் தேடி ஓடினார்கள். இன்று உலகம் முழுவதும் 135 இலட்சம் யூதர்கள் வாழ்கின்றார்கள். இவர்கள் சொந்த நாட்டை விட்டு விரட்டப்பட்ட 25 ஆவது தலைமுறையினர். இருப்பினும் தம நிலையில் இருந்து மாறவில்லை. சொந்த நாட்டிற்கு தம் பிள்ளைகளை ஒவ்வொரு வருடமும் அழைத்து வருகிறார்கள். இவர்களின் இனப்பற்றே இன்று இவர்கள் ஒருங்கிணைந்த பொருளாதாரத்தின் உச்சக் கட்டத்தில் விளங்குவதற்குக் காரணம்.

இன்று நாம் புலம்பெயர்ந்த ஒரு தலைமுறையுடன் நான் ஒரு பிரித்தானியன் என்றோ நான் ஒரு கனேடியன் என்றோ சொல்லி பெருமை கொள்வது சுயநிர்ணய சிந்தனைக்கு அப்பாற்பட்டது.

புலம்பெயர் நாடுகளில் வாழும் நாம் தனிப்பட்ட முறையில் வசதியான வாழ்வையே அனுபவிக்கின்றோம்.

தமிழினத்தின் பொருளாதாரம் எனப் பார்க்கின்றபோது பணக்காராக இருந்தாலும் ஈழத்தமிழர்கள் என்று பார்க்கின்ற போது அவர்களின் பொருளாதார மேம்பாடுகள் இன்று அடிப்படைத் தேவைகளுடனே தள்ளாடி நிற்கின்றது. இவர்களின் முன்னேற்றத்திற்கும் எம் பங்குகள் என்ன? ஈழத்தில் பாரிய பொருளாதாரத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும்.

அங்கு ஏற்கனவே திட்டமிடப்பட்டுள்ள பொருளாதாரத் திட்டங்களுக்கு பக்கபலம் கொடுக்க வேண்டும். நாம் தனிப்பட செய்யும் திட்டங்கள் பெருமளவிற்கு பொதுவாரியான நலன்களை மக்களுக்கு ஏற்படுத்த மாட்டா. வளர்ச்சி அடைந்த நாடுகளில் ஆயிரக்கணக்கான தனியார் நிறுவனங்கள் இருக்கின்றன.

இவை போன்ற நிறுவனங்கள் எம்மத்தியிலும் உருவாக்கப்பட வேண்டும். இன்று இலங்கையின் அரசியல் நிலையில் மாற்றங்களை ஏற்படுத்தி நிற்பதில் பொருளாதார சீர்குலைவுகளும் முக்கிய காரணியாக அமைகின்றன. நாட்டைப் புனரமைக்க இலங்கை அரசாங்கம் அந்நியனிடம் கையேந்தி நிற்கின்றது.

இவ்நலங்கள் கிடைக்க வேண்டுமானால் போரைக் கைவிட்டு, சமாதான முன்னெடுப்புகளைப் பேண வேண்டிய நிலைக்கு இலங்கை அரசு தள்ளப்படுகிறது.

பசிவந்தால் பத்தும் பறக்குதோ இல்லையோ சிங்கள அரசு இனத்துவேசத்தை துறந்தே ஆக வேண்டிய நிலை இன்று.

பெரும்பான்மை இனம் என்ற மனித பலத்தை வைத்து போரில் வெல்லலாம் என்று எண்ணிய சிங்கள அரசு! பெரும்பான்மைக்கு வேண்டிய பெரும் பொருளாதாரத்தையும் வைத்திருக்க வேண்டும்.

அது இன்று இலங்கை அரசிடம் இல்லை. மாறாக மாற்றானிடம் கையேந்துவதற்காகவே சமாதானம் என்றால்? காலப்போக்கில் சிறுபான்மையின் பொருளாதாரப்பலம் பெரும்பான்மையினருக்கு சாதகமாக அமைவதும், பாதகமாகுவதும் சிங்கள அரசியல்வாதிகளின் மாற்றத்தில் அமையும்.

எமக்கு இருக்கும் இன்றைய பலத்தையும், சந்தர்ப்பத்தையும் வைத்து தமிழர் கூட்டுப் பொருளாதாரம் பெருவாரியாக ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இதற்குப் புலம் பெயர் தமிழர்கள் ஒன்றிணையும் தகுந்த சரியான காலம் இதுவே. இன்றைய உலக நடப்பில் பொருளாதார மேம்பாடுகளினால் அரசியல் நலன்களை நாம் பெறவும் சாத்தியமாகவே இருக்கும் என்பதில் ஐயம் இல்லை.

*நன்றி : தமிழ் உலகம்*

## வலம்புரிச் செய்தியாளர்களுக்கான விசேட கூட்டம்

**வலம்புரியின் பிரதேச செய்தியாளர்களுக்கான விசேட கூட்டம் இன்று புதன்கிழமை காலை 10.00 மணிக்கு வலம்புரியின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.**

**இக்கூட்டத்தில் செய்தியாளர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.**

**நிர்வாக உத்தியோகத்தர்.**

## இன்று ஒரு தகவல்

# எப்போதும் பிஸி

எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் ஒரு அலுவலகத்தில் வேலை செய்கிறார். அப்படி ஒன்றும் பெரிய நெருக்கடியான வேலை எதுவும் இல்லை. இருந்தாலும் எந்த நேரம் போய்ப்பார்த்தாலும் மிகவும் பிஸியாக இருப்பதாகக் காட்டிக்கொள்வார்.அப்படி ஒரு சுபாவம் அவருக்கு. "சார் உங்களைத் தான் பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன்" என்று சொன்னால் போதும் உடனே "கொஞ்ச நேரம்" இருங்கள் என்று சொல்லி விட்டு மேசை மீதுள்ள ஃபைலையெல்லாம் எடுத்துப் பரபரவென்று திருப்புவார். அடுக்குவார். யாருக்காவது போன் பண்ணுவார். மீண்டும் வைப்பார். இப்படி ஏதாவது செய்து விட்டு "ம் இப்போது சொல்லுங்கள் என்ன விஷயம்?" என்பார்.

வெளியிலிருந்து யாராவது போன் பண்ணினால் போனை எடுத்து உடனே பேசமாட்டார். கையில் கொஞ்சநேரம் எடுத்து அப்படியே வைத்திருப்பது. அதன் பின் பேசுவது அப்போது தான் இவர் மிகவும் பிஸியாக இருக்கிறார் என்று போன் செய்பவர்கள் நினைப்பார்களாம். இப்படிப்பட்டவர்களை நீங்களும் சில இடங்களில் பார்த்திருக்கலாம்.

பிஸியாக இருப்பதாக இருக்கிறது பாருங்கள் இந்தப்பழக்கம் இப்படியே நீடித்தால் பின்னர் பெரிய மன நோயாளியாகக் கூட ஆகலாம் என்று நிபுணர்கள் சொல்கின்றனர். இவர்கள் நடிக்கின்றனர் என்பதைப் புரிந்து கொள்பவர்கள் இவர்களைக் கேலியாகப் பார்ப்பார்கள். அப்படிப்பார்ப்பது கண்ணில் பட்டால் இன்னும் மனவருத்தமாகி விடுமாம்.

இப்படிப் பரபரப்பாக இருப்பதாக நடிக்கிறார்களே இவர்களைப் பற்றி மனோதத்துவ நிபுணர்கள் என்ன சொல்கின்றனர் தெரியுமா? இவர்கள் எல்லோரும் பதவியில் அவர்கள் விரும்பும் காரியங்களையும், அந்தஸ்தையும் பெற முடியாத சூழ்நிலையில் தமது ஈகோவை காப்பற்றுவதற்காக இப்படிச் செய்கின்றனராம்.

மனிதனது மனம் இது போன்ற சந்தர்ப்பங்களில் ஏதாவது சில காரணங்களைக் கற்பித்துக்கொண்டு சமாதானம் அடையுமாம். பரீட்சையில் சித்தி பெறாத மாணவர்கள் ஆசிரியர்களை குறைகூறுவதும் கூட இப்படித்தானாம். இதை "மனதின் தற்காப்பு சாதனங்கள்" என்று கூறுகின்றனர். பிஸியாக இருப்பதாகக் காட்டிக்கொள்வதும் அப்படிப்பட்ட ஒரு வகைப் பரபரப்புதானாம்.

ஒருத்தருக்கு அவரது பதவியில் உரிய அங்கீகாரம் கிடைக்காவிட்டால் அப்படிப்பட்ட நிலையில் இப்படி பரபரப்பாக இருப்பதாக நடித்துக் கொண்டு அதை அடைந்ததாகத் திருப்திப்பட்டுக் கொள்வார். இது போன்ற ஆசாமிகள் எல்லோரும் மனநல மருத்துவர்களிடம் சென்று விஷயத்தைச் சொல்லி ஆரம்பத்திலேயே குணப்படுத்திக்கொள்வது நல்லது. இனிமேல் யாராவது உங்களிடம் நான் 24 மணி நேரமும் பிஸி என்று சொன்னால் அல்லது எப்போதும் பிஸியாக இருப்பது போல் நடித்தால் அவர்களைக் கவனித்துப்பாருங்கள்.

சரி. இந்த நிலைமையைத் தவிர்ப்பது எப்படி? ஒருவரை எந்த நாற்காலியில் கொண்டு போய் உட்கார வைத்தாலும் அந்த நாற்காலிக்குப் பொருத்தமாகத் தன்னை மாற்றிக்கொள்ளவேண்டும். அந்த வேலையைக் கற்றுக்கொள்ள வேண்டும். பதவிக்குரிய வேலை நன்கு பழக்கப்பட்டு விட்டால் இந்த நடிப்புக்கு அவசியமற்றுப் போய்விடும்.

ஒருநாள் காலை 10.00மணி எப்போதும் பிஸியாக இருப்பதாகச் சொல்லிக்கொள்ளும் ஒருவர் அலுவலகத்தைவிட்டு வெளியே வந்தார். "என்ன சார் இது எல்லோரும் அவசரமாக அலுவலகத்திற்கு வரும் நேரம் இது. நீங்கள் அவசரமாக வெளியே வருகிறீர்களே?" என்றேன். " தினமும் கையோடு கொண்டு வரும் ஒரு முக்கியமான விடயத்தை இன்று வீட்டில் விட்டுவிட்டு வந்துவிட்டேன். அது தான் நான் அவசரமாகப் போகிறேன்" என்றார்.

"அதற்கு ஏன் இப்படி ஓட வேண்டும். பேசாமல் உங்கள் ஸ்கூட்டரை எடுத்துக்கொண்டு போக வேண்டியது தானே" என்றேன். "நான் வீட்டில் விட்டுவிட்டு வந்ததே எனது ஸ்கூட்டரைத்தான் சார். அதை எடுத்துக்கொண்டு வரத்தான் ஓடுகிறேன்" என்று கூறிவிட்டு வேகமாக ஓடி மறைந்தார்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# தொழிற் பயிற்சிகளை வழங்கி அறிவியல் சமூகத்தை உருவாக்குவோம்

## யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர்

(யாழ்ப்பாணம்)

தொழிற் பயிற்சிகளை வழங்குவதன் மூலம் அறிவியல் சார் சமூகம் ஒன்றைக் கட்டியெழுப்புவதே யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையின் நோக்கம் என அதன் தலைவர் பி. கனகசபாபதி தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தின் இரண்டாவது மாடியில் உள்ள கூட்டுறவு சபை அலுவலகத்தில் இடம்பெற்ற யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையால் வழங்கப்பட்டுவந்த கணனிப் பயிற்சி நெறியின் நிறைவு நாள் வைபவத்திலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

மேற்படி பயிற்சி நெறிக்கான இணைப்பாளர் திருமதி ஆர். யோகராஜன் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் கூட்டுறவுச் சபையின் செயலாளர் எஸ். சண்முகசுந்தரம் மற்றும் கூட்டுறவுச் சபை உறுப்பினர்கள், மாணவர்கள், கூட்டுறவாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய கூட்டுறவுச் சபையின் தலைவர்,

இன்று யாழ். குடாநாட்டின் சமூக அபிவிருத்தி சார் பணிகளில் கூட்டுறவுச் சபையானது பல்வேறு பங்களிப்புகளையும் செய்து வருகிறது.

அந்த அடிப்படையில் சமூகத்தின் தொழில்நுட்பம் சார் அறிவை வளர்த்துக்கொள்வதற்காக கணனிப் பயிற்சிகளைத் தற்போது வழங்கி வருகிறது.

இதனால் பலர் பயன்பெற்று வருகின்றனர். இது அவர்களுக்கு சமூகத்தில் நன்மதிப்பையும் தொழில வாய்ப்பையும் பெற்றுக்கொடுக்கும் என்பதில் ஐயமில்லை.

கூட்டுறவே நாட்டுயர்வு என்பதற்கேற்ப கூட்டுறவுச் சபை தனது சமூக அபிவிருத்திப் பணிகளை சமூகத்திற்குத் தொடர்ந்தும் வழங்கும். இது கல்வி, சமூக அபிவிருத்தி, மேம்பாடுகள் எனப் பல வடிவங்களில் மக்களைச் சென்றடையும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-4)

# சமாதான முயற்சிகளுக்கு உதவுவது பற்றி ஐக்கிய தேசியக் கட்சி ஆலோசனை

(களுத்துறை)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சமாதான முயற்சிகளுக்கு உதவுவது தொடர்பாக ஐக்கிய தேசியக்கட்சி ஆலோசனைகளை நடத்தி வருகிறது.

தற்பொழுது ஆட்சியமைத்துள்ள ஐக்கிய சுதந்திர முன்னணி அரசாங்கம் ஐக்கிய தேசிய முன்னணியால் ஆரம்பிக்கப்பட்ட சமாதான முயற்சிகளைத் தொடர முனவந்துள்ளது.

இதனடிப்படையில் புதிய அரசினால் தொடரப்படவுள்ள சமாதான முயற்சிகளுக்கு எவ்வாறு பங்களிப்புச் செய்ய வேண்டும் என்பது குறித்தும் எந்த வேளையில் பங்களிப்புச் செய்வது என்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டுவருகிறது.

இவ் ஆலோசனைகளில் முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க மற்றும் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோர் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்துடன், புதிய அரசினால் தொடரப்படவிருக்கும் புலிகளுடனான பேச்சுக்கள் எத்தகைய அரசியல் மாற்றங்களுடன் இடம்பெறவுள்ளது என்பதையும், அதன் வளர்ச்சிப்போக்குகளை தெளிவுபடுத்துமாறும் ஜனாதிபதியிடம் ஐக்கிய தேசியக்கட்சியால் கோரப்படவிருக்கிறது. (உ-4,63)

## இராசி பலன்

**05.05.2004**

**(சித்திரை 23, புதன்கிழமை)**

**பிரதமை பின்னிரவு- 12.21 மணிவரை**
**விசாகம் முன்னிரவு-11.45 மணிவரை**
**இராகுகாலம் 11.56 - 1.26 மணிவரை**
**சுபநேரம் 4.26 - 5.56 மணிவரை**
**சித்தாமிர்தம்**

**மேடம்**
நல்ல வரவேற்பு, தெய்வசிந்தை, தொழில் முன்னேற்றம், உடல்நலம்.

**இடபம்**
தடைப்பட்ட காரியம் கைகூடும், உறவினர் உதவி,மனமகிழ்ச்சி, போசன நன்மை.

**மிதுனம்**
மனச்சஞ்சலம், காரியதாமதம், குடும்பக் கவலை, பிரயாண நன்மை.

**கடகம்**
கோபப்படுதல், முயற்சி தாமதம், உடல் சோர்வு, திடீர் நன்மை.

**சிங்கம்**
பிரயாண நன்மை, தனலாபம், தொழில் முன்னேற்றம், உறவினர் வழி உதவி.

**கன்னி**
பெரியோர் மதிப்பு, தன விரயம், உணர்ச்சி வசப்படல், காரிய தாமதம்.

**துலாம்**
தெய்வசிந்தை, தேக சௌக்கியம், நல்ல முயற்சி, எதிர்பாராத நன்மை.

**விருச்சிகம்**
மனப்பதற்றம், உறவினர் மனஸ்தாபம், காரிய அலைச்சல், வேலைக் கஷ்டம்.

**தனுசு**
காரிய சித்தி, மனமகிழ்ச்சி, பிறருக்கு உதவி, தொழில் வருமானம்.

**மகரம்**
அதிக பிரயாசை, புதிய திருப்பம், செய் தொழில் நன்மை, நல்ல செய்தி.

**கும்பம்**
மனச்சஞ்சலம், ரோக நிலை, பிரயாணம், தொழில் சிந்தை.

**மீனம்**
பணத்தட்டுப்பாடு, காரிய தடை, உடல் நலக்குறைவு, பிரயாண பயம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

*வளவன்*

# கண்ணிவெடி அகற்றும் பயிற்சியை 36 பேர் நிறைவு செய்தனர்

(மன்னார்)

மிதிவெடிகளை அகற்றுவதற்கென மன்னாரில் தெரிவுசெய்யப்பட்ட 36 பேரும் கண்ணிவெடிகள் அகறறுவது தொடர்பான பயிற்சியினை நிறைவு செய்துள்ளனர்.

வவுனியா, மன்னார் வீதியிலுள்ள தொழில்நுட்பக் கல்லூரியில் இடம்பெற்ற இந்தப்பயிற்சி கடந்த முதலாம் திகதி நிறைவு பெற்றது.

கண்ணிவெடிகளை அகற்றுவதற்கான ஜப்பானிய அமைப்பின் வதிவிடப்பிரதிநிதி யஸீகாய் இவர்களுக்கான சான்றிதழை வழங்கினார். கடந்த காலத்தில் இலங்கைப் படையினரால் வடக்கு-கிழக்கின் பல்வேறு பகுதிகளில் புதைக்கப்பட்ட மிதிவெடிகளை அகற்றும் பணிகளில் இவர்கள் ஈடுபடவுள்ளனர். (உ-121)

## இந்தியாவில் இருந்து கடத்தப்பட்ட விதை வெங்காயம் மன்னார் பொலிஸாரால் மீட்பு

(மன்னார்)

சட்டவிரோதமாக விதை வெங்காயத்தை இலங்கைக்கு கொண்டுவரும் மோசடி வலையமைப்பு தொடர்பான தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

இந்தியாவில் இருந்து கடல் மார்க்கமாக இவை எடுத்துவரப்படுவதாக அறிவிக்கப்படுகின்றது. இவ்வாறு கொண்டுவரப்பட்ட ஒரு தொகை விதை வெங்காயத்தை கடற்படையினர் நேற்றுமுன்தினம் தலைமன்னார் கடற்பரப்பில் கைப்பற்றியுள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட விதை வெங்காயத்தின் மொத்தப்பெறுமதி 4 இலட்சம் ரூபாவிற்கு அதிகம் எனக் கூறப்படுகிறது.

அவற்றை எடுத்துவந்த 6 நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் நீண்டகாலமாக இவ் வர்ததகத்தில் ஈடுபட்டிருக்கலாம் என சந்தேகிப்பதாகக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர். (உ-121)

# பிரதேச செயலகம இடமாற்றம்

(காரைநகர்)

காரைநகர் வலந்தலைச் சந்தியில் புதிதாகக் கட்டப்பட்ட காரைநகர் பிரதேச செயலகம் 2ஆம் உலக இந்து மாநாட்டு ஞாபகார்த்த மண்டபத்திற்கு இடமாற்றப்பட்டுள்ளது. இதுவரை காலமும் காரைநகர் சின்னாலடியில் அமைந்துள்ள தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கி வந்த காரைநகர் பிரதேச செயலகம், காரைநகர் கிழக்கு, மேற்கு பகுதி மக்களிற்கு மையமாக அமைந்துள்ள வலந்தலைப் பகுதிக்கு தற்போது இடமாற்றப்பட்டது.

இதனால் காரைநகரின அனைத்துப் பகுதி மக்களும் பிரதேச செயலகத்துடன் இலகுவாக தொடர்பு கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-246)

# மகவிழந்த தாயின் துயர் தீர்த்த மா முனிவர்

பொன். இராசதுரை

"கால் ஒடிந்து முடமாகிய
ஆட்டைப்
பரிந்தெடுத்துத் துயர்
தீர்த்தான்
முறையே தவறிய மிருகப்
பலிதனை
முன்னின்றே தடுத்தான்
கருணைக் கடலாம் கௌதம
புத்தன்
கற்றறிவாளர்கள் ஏத்தும்
சித்தன்..."



எனப் புகழ்ந்தேத்தப்படும் புத்த பெருமான் அரச குலத்தில் பிறந்திருந்தாலும், ஆண்டி வாழ்வை விரும்பி ஏற்றுக் கொண்டவர்.

அழகு மனைவி, அருமைப் புதல்வன், அரச போகம் இங்கிதம் அறிந்து ஏவல் செய்ய ஏவலர் கூட்டம், அன்பைப் மொழியும் பெற்றோர் என்ற அத்தனையையும் ஒரே இரவில் தூக்கியெறிந்து விட்டுத் துவராடையுடன் உண்மையைத் தேடி அரண்மனையை விட்டு வெளியேறியவர்.

இன்று பலர் புத்தரைக் கடவுளாகப் போற்றி வணங்கினாலும், ஏத்தித் துதித்தாலும் அவர் தன்னைக் கடவுள் என ஒருபோதும் கூறியவர் அல்லர்.

அன்பு ஒன்றினாலேயே அகிலத்தில் சாந்தியை ஏற்படுத்த முடியும் என நம்பியவர் அவர், அன்புக்கு சாதி, சமய வேறுபாடுகிடையாது; இன, மொழி வித்தியாசம் கிடையாது; ஊர்வன தொடக்கம் மனித வர்க்கம் வரை சகல உயிரினமும் அன்புக்குப் பாத்திரமானவை என்பது அவரது நோக்கு.

பிம்பிசார மன்னனது வேள்வியிலே பலியிடுவதற்காக ஓட்டிச் செல்லப்பட்ட ஆட்டு மந்தைக் கூட்டத்திலே கால் ஓடிந்து நடக்க இயலாமல் துன்பப்பட்ட ஆட்டுக் குட்டியை பரிந்தெடுத்து தனது தோளிலே சுமந்து, அன்புடன் தடவி, அரவணைத்து அதன் துன்பம் போக்கிய பெருந்தகை.

மிருக பலிமூலமே தெய்வத்தைத் திருப்திப்படுத்த முடியும் என்ற நம்பிக்கையுடன் யாகம் செய்வதில் தன் வாழ்க்கையின் பெரும்பகுதியைச் செலவிட்ட பிம்பிசாரனது மனதைத் தனது அன்பு வார்த்தைகளால் மாற்றி எல்லா உயிரையும் தனது உயிர் போல் மதிக்கும் பக்குவத்தை அவனுக்கு ஊட்டியவர்.

'எவ்வுயிரும் தன்னுயிர் போல் எண்ணியிரங்கும் தெய்வ அருட் கருணையை' அவனுக்கு உணர்த்தியவர்.

அறம் கிடந்த நெஞ்சும் அருலொழுகு கண்ணும், அன்பு ததும்பும் வார்த்தைகளும் அவரை மனிதகுல மாணிக்கமாக உயர்த்தியது.

இன்று புத்தரின் பெயரால் பௌத்தம் ஒரு மத மாக்கப்பட்டு, பௌத்தம் ஒரு குறிக்கப்பட்ட இனத்துக்கே உரியது எனச் சொந்தம் கொண்டாடப்பட்டு புத்தரின் புனித போதனைகள் திசைமாறி எடுத்துச் செல்லப்பட்ட போதிலும் புத்த பெருமான் அனைவராலும் நேசிக்கப்படுகிறார்.

புத்தரின் வாழ்க்கையில் நிகழ்ந்ததாகக் கூறப்படும் பல சம்பவங்கள் புனைகதைகளாகவும், கவிதைத் தொகுப்புகளாகவும் வெளிவந்திருக்கின்றன.

சுஜாதை என்ற ஓர் இளம் பெண்; ஒரு குழந்தைக்குத் தயார். இள வயதிலேயே கணவனை இழந்தவள். குழந்தைதான் தனக்குச் சகலமும் என்ற எண்ணத்துடன் ஊரின் ஒதுக்குப் புறத்தில் சிறு குடிசையொன்றில் வாழ்ந்து வருகிறாள். குழந்தையின் கண்ணழகிலும் முக அழகிலும் தன் துன்பத்தை மறந்திருந்த நேரத்திலே பேரிடி விழுகின்றது.

ஒரு நாள் காலை வேளை - குழந்தையை முற்றத்தில் விளையாட விட்டுவிட்டு சுஜாதை வளக்கம் போல தனது அலுவல்களைக் கவனித்துக் கொண்டிருக்கிறாள்.

அந்த நேரம் எங்கிருந்தோ வந்த கருநாகம் ஒன்று குழந்தை முன் படம் எடுத்து ஆடத் தொடங்கியது. பாம்புக்கும் பழுதைக்கும் வித்தியாசம் தெரியாத அப் பாலன், அப்பட வரையை விளையாட்டுப் பாண்டமென எண்ணி அதனோடு விளையாட ஆரம்பிக்கின்றான். அதன் வாலையையும் தலையையும் பிடித்து விளையாடுகின்றான். கோபம் கொண்ட நாகம் தன் தலையை உயர்த்தி அப்பாலனைத் தீண்டுகிறது. 'ஓ' என்ற சத்தத்துடன் குழந்தை அடுத்த கனமே பிணமாகத் தரையில் சாய்ந்தது. பாம்பு சரசரவொன்று புதரினூடே ஓடி மறைந்தது.

குழந்தையின் அலறலைக் கேட்டு ஓடிவந்த சுஜாதை, நிறுத்த விழியோரிடத்தில் நிலையாக நிற்க, நீட்டிய கால் நீட்டியபடி கிடக்கப் பிணமாகிக் கிடந்த குழந்தையைக் காணுகிறாள்.

உயிரற்றுக் கிடந்த குழந்தையின் சடலத்தைத் தோளிலே சுமந்த வண்ணம் பித்துப் பிடித்தவள் போல பல இடங்களுக்கு ஓடுகிறாள்.

அரவம் தீண்டியதால் குழந்தை அறிவு மயங்கிக் கிடக்கிறது என்றே அவள் நம்பினாள். மயக்கத்தைத் தீர்க்க மருத்துவர்களை நாடினாள்.

நாடியைப் பிடித்துப் பார்த்த வைத்தியன் ஒருவன் குழந்தையின் உயிர் போய்விட்டது; ஒன்றுமே செய்ய இயலாது என்றான்.

மற்றொருவன் மூடுசன்னியால் குழந்தை மூச்சிழந்துவிட்டது என்றான்.

குழந்தையுடன் இவள் படும் துன்பத்தைக் கண்ட ஒரு பெரியவர் அவள் துயரை நீக்கும் நோக்குடன் பெண்ணே இக் குழந்தைக்கு உற்ற நோயைப் போக்கும் ஆற்றல் உள்ள ஒருவர் அந்த மலையுச்சியிலே இருக்கிறார்.

மலை மீது துவராடையுடன் முண்டிதம் செய்யப்பட்ட தலையுடன் இருக்கும் துறவியினாலே தான் உனது துயரைத்துடைக்க முடியும். அவரை நீ சந்தித்தால் தீராத உன்துயர் தீரும் என்கிறார்.

அடுத்த கணமே காற்றாகப் பறந்த அவள் புத்தரின் காலடியிலே மண்டியிட்டபடி கிடக்கின்றாள்.

**காடும் மலையும் கடந்து**
**வந்தேன்-உன்னைக்**
**கண்டு துயரெல்லாம் போக்க**
**வந்தேன்**
**வாடும் மலர்ச் செண்டு போல்**
**கிடக்கும் - இந்த**
**மைந்தன் உயிரெழச் செய்யும்**
**ஐயா!**

**நெஞ்சிற்கிடத்தி வளர்த்த**
**பிள்ளை - கண்ணில்**
**நித்திரை நீக்கியான்**
**காத்தபிள்ளை -**
**விஞ்சு தவத்தினில்**
**பெற்றபிள்ளை - என்னை**
**விட்டுப் பிரிந்தறியாத**
**பிள்ளை**

எனப்புலம்புகிறாள்

புத்தர் அவளை நிமிர்ந்து பார்க்கிறார்.

**'மானைப் பழித்த விழியுடை**
**யாள் - ஒரு**
**மாமயில் போலும் நடை**
**யுடையாள்**
**தேனைப் பழித்த மொழியுடை**
**யாள், பெண்ணின்**
**தெய்வம் எனத் தகும் சீருடை**
**யாள்**
**ஆறாகக் கண்ணீர் வடித்து**
**நின்றாள் - கையில்**
**ஆண்மக வொன்றையும்**
**ஏந்தி நின்றாள்...'**

கண்ணீரும் கம்பலையுமாக நிற்கும் அப்பெண்ணைத் தன் கருணை ததும்பும் விழிகளால் உற்று நோக்குகிறார் புத்தர். பெண்ணே உனக்குற்றதுன்பம் யாதோ எனக்கேட்டன அவர் வழிகள்.

**சிரித்த முகமென மலர்ந்து**
**செழித்த செடி நடுவே**
**சிறு மகனும் விளையாடித்**
**திரிந்திடு மல் வேளை**
**விரித்த படமெடுத்து அரவொன்று**
**அடுத்தொரு கைப்பற்றி**
**விளங்குமணிக் கடகமென**
**விளைந்து கிடந்தனவே!**
**பால் மனம் மாறாத சிறு பால**
**கனும் அறியான்**
**பட அரவை விளையாட்டுப்**
**பாண்டமெனக் கொண்**
**டான்**
**வாலினையும் தலையினையும்**
**வயிற்றினையும் வலித்து**
**வருத்தமுறச் சிறு குறும்பு**
**செய்துவிட்டான் ஐயா!**

சிறிது நேரத்தில் என் செல்வின் உடல் குளிர்ந்து விறைத்து விட்டது. பலரிடம் சென்றேன் இவர் விடமேறி மடிந்து விட்டான் என்றார்கள். வேறு சிலர் மூடு சன்னியென்றார்கள். இப்படிப் பலரும் பல விதமாகக் கூறினார்களே அன்றி, என் குழந்தையின் நோய் தீர்க்க எவரமே முன்வரவில்லை. கடைசியாக என்மீது இரக்கம் கொண்ட ஒருவர்

**'காரிகையே! மலைமீது காவி**
**யுடை அணிந்து**
**முண்டிதமாய் அலையு மொரு**
**முனிவர் அடிபணித்தால்**
**முடியாத காரியமும் முடியும்'** என உரைத்தார்.

எனத் தனது சோக வரலாற்றைக் கூறுகிறாள்.

குழந்தை இறந்து விட்டது. இறந்த குழந்தைக்கு உயிர் கொடுக்க எவராலும் முடியாது என்பதை அந்தத் தாய் உணர வேண்டும் என எண்ணினார் புத்தர்.

**தாயே! நின் மனக் கவலை -**
**ஒழிந்திட**
**தக்க நல் மருந்தளிப்பேன்**
**சேயினை எழுப்பிடுவேன் -**
**விளையாடித்**
**திரியவும் செய்திடுவேன்...**

தாயே! அதற்கு ஒரு பொருள் வேண்டும். அதை நீகொண்டு வந்தால் அடுத்த வினாடியே உன் மைத்தன் உயிர் பெற்றுவிடுவான்.

பெருமானே! தாங்கள் விரும்பும் பொருள் யாதோ? என அந்த அன்னை வினவுகிறாள்.

**'நாவிய கடுகு வேண்டும் - அது**
**வுமோர்**
**நாடுரி தானும் வேண்டும்'**

பெண்ணே! எனக்கு வேண்டும் பொருள் கடுகு, அதுவும் ஒன்றரை நாழி (ஓரளவு) கடுகு

'கடுகு தானே சுவாமி! இதோ கொண்டு வருகிறேன் ' என எழுந்தாள் அப்பெண்

புத்தர் சிரித்தார் பெண்ணே சற்றுப் பொறு. நீ கடுகைப் பெறும் வீட்டிலே மரணம் ஒரு போதுமே நிகழ்ந்ததாக இருக்கக் கூடாது.

அடுத்த வினாடியே அவள் குழந்தையுடன் காற்றாய்ப் பறந்தாள்.

அவளது துயரக் கதை கேட்ட அனைவரும் கடுகு வழங்க முன் வந்தனர். அதை ஏற்பதற்கு முன் அவள் கேட்டாள்,

**'தாயரே, நீவிர் தங்கும்**
**மனையிது**
**சாவறியாத தனி மனை தானா?**
**தந்தை, தாயர், தமக்கை,**
**தங்கை,**
**மைந்தர் எவரும் மரித்ததும்**
**உண்டோ?**

அவள் உரை கேட்டோர் அவளுக்காக - அவள் அறியாமைக்காக இரங்கினர்.

**'காலையில் உதித்த கடுங்**
**கதிர்ச் செல்வன் மாலையில்**
**தளர்ந்து மறைவது மிலையோ?**

---

**பிறந்தவர் இறப்பதும் இறந்தவர் பிறப்பதும் உலகின் இயற்கை; ஒழித்தலும் எளிதோ?** எனப் பலவாறு ஆறுதல் கூறினர்.

அவர்களது உரை அவள் மனதை தேற வைத்தது. புத்திர சோகத்தால் மறைந்திருந்த உண்மை மெல்லமெல்ல மனதில் உறைக்கத் தொடங்கியது.

உண்மையை உணர்ந்த அவள் திரும்பவும் புத்தரின் திருவடிக் களை அடைந்தாள்.

**'புவியெலாம் நிறைந்த புக**
**ழோய்! புலவர்**
**கவியெலாம் நிறைந்த கருணை**
**யங் கடலே**
**ஊரெலாம் அலைந்தேன்று**
**ஒவ்வொரு மனையும்**
**ஏறி இறங்கினேன்...'**

அதன் பயனாக உண்மையை உணர்ந்து கொண்டேன்

**'ஐயமிடு மனைகளிலே மரனி**
**மென்றும்**
**அறியாத மனையெதுவும்**
**இல்லையில்லை**
**வையகத்தில் பிறப்புளதேல்**
**இறப்பு முண்டு;**
**மாற்றறிய விதியிதுவென்று**
**உணர்ந்து கொண்டேன்**
**கையமர்ந்த மகவினையும்**
**கானில் இட்டேன்**
**கண்விழியாப் பிணம் வைத்துக்**
**காப்பதுண்டோ?**

செயய திருவடி பணிந்து இந்தச செய்தியினைத் தெரிவிக்க வந்தேன்' என்றாள் தன்முன் நின்ற அத்தையலை 'என்றும், எங்நுனும், எவ்வுயிரும் தொழ நன்று கண்ட அம் மெய்ஞானியும்' நோக்கி,

**'எங்குமில்லாப் பொருள் தேடச்**
**சென்ற நீயும்**
**யான் நினைத்த பொருளத**
**னைப் பெற்று வந்தாய்!**
**தாங்குமிந்த உலகியற்கை**
**மாறா தம்மா!**
**தனையனை நீ எண்ணி மனம்**
**தளரவேண்டாம்**
**அங்கமெலாம் வாயாக அழு**
**திட்டாலும்**
**அவனெழுந்து நின் துயரம்**
**அகற்றல் உண்டோ'**

புத்தரின் உரையால் அத் தாயின் உள்ளம் சாந்தியடைந்தது.

இந்த வரலாற்றை அற்புதமான கவிதைகளால் புனைந்து நமக்கு அளிந்தவர்.

நாஞ்சில் கவிஞர் என்றும், கவி மணி என்றும் அழைக்கப்படும் கவி மணி தேசிக விநாயகப் பிள்ளை அவர்களாவார்.

'மலரும் மாலையும்' அவரது கவிதைத் தொகுதிகளில் ஒன்று.

எளிய, இனிய சொற்களைக் கவிதையாக்கி, படிப்பவர் கண்ணீர் சிந்தும் வண்ணம் மிக உருக்கமாக மகனை இழந்த தாயின் கதையை உருவாக்கியிருக்கிறார்.

# மானிப்பாய் சுகாதார அதிகாரி பிரிவில் நாய்க்கடிக்கு 247 பேர் சிகிச்சை

(சுதுமலை)

மானிப்பாய் - சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இந்த வருடம் முதல் மூன்று மாதங்களில் மட்டும் 247 பேர் நாயினால் கடியுண்டு இப்பகுதியில் அமைந்துள்ள அரசினர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுள்ளதாக வைத்தியசாலைகளின் அறிக்கைகளிலிருந்து தெரியவருகின்றது.

மேலும், இவ்வாறு நாயினால் கடியுண்டவர்களில் 41 பேர் வரையில் தெருவில் உள்ள கட்டாக்காலி நாய்களினாலும் மிகுதி 206 பேர் வளர்ப்பு நாய்களாலும் கடியுண்டு சிகிச்சை பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் சங்கானை அரசினர் வைததியசாலையில் மட்டும் கடந்த முதல் மூன்று மாதங்களில் 107 பேர் வரையில் சிகிச்சை பெற்றுள்ளதாகவும் அதில் 28 பேருக்கு விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடங்களுடன் ஒப்பிடும் போது இவ்வருடம் முதல் மூன்று மாதங்களில் இப்பகுதி வைத்தியசாலைகளில் நாய்க்கடிக்கு சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதாகவும் இதைத் தவிர்க்க பொது மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும் எனவும் அதனுடன் வளர்ப்பு நாய்களிற்குத் தவறாமல் தடுப்பு ஊசிகளைப் போட்டுக் கொள்வதன் மூலம் பேராபத்துக்களைத் தவிர்க்க முடியும் எனவும் வைத்தியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (உ-252)

# உதைபந்தாட்டத் தனவந்தர்கள்

கடந்த சில வருடங்களாக உதைபந்தாட்டம் பல சிக்கலான நிதிப்பிரச்சினைகளை எதிர்நோக்கிவருகின்ற பொழுதும் பிரபல உதைபந்தாட்ட வீரர்களின் சம்பளங்கள் அதிகரித்துக்கொண்டே செலகிறது. அவர்களோடு சில முகாமையாளர்களும் இணைந்திருப்பது உதைபந்து உலகை ஆச்சரியத்திலாழ்த்தியுள்ளது.



டேவிட் பெக்காம்

இதன்படி இங்கிலாந்து அணியின் தலைவரும் ரியல் மட்ரிட் கழக வீரருமான டேவிட் பெக்காம் உலகின் அதிக வேதனம் பெறும் உதைபந்து வீரர் என்ற பெருமையைப் பெறுகிறார். ரியல் மட்ரிட் கழகம் அவருக்கு 4.4மில்லியன் பவுண்சை வழங்குகிறது. கடந்த வருடம் அவர் 15 மில்லியன் பவுணசை வேதனமாகப் பெற்றார். இதில் அவருக்கான அன்பளிப்புக்களும் அடங்கும். ரியல் மட்ரிட கழகத்தில் இருந்து இன்னும் மிகப் பெரிய தொகைக்கு அவரைச் செல்ஷியாக் கழகம் ஒப்பந்தம் செய்ய விருப்பதும் குறிப்பிடத்தககது.

இவருக்கடுத்தபடியாக அதிக ஊதியம் பெறுவோா வருமாறு றொனால்டோ 11மில்லியன் பவுண்ஸ், சினெடின் ஷிடேன் 9.4மில்லியன் பவுண்ஸ், மைக்கல் ஓவன் 6.1மில்லியன் பவுண்ஸ். இவர்கள் உதைபந்து வீரர்களாவர்.

இவர்களைவிட முகாமையாளாகளாகவும், பயிற்றுவிப்பாளர்களாகவும் விளங்குபவர்களில் சேர் அலெக்ஸ் பேர்கஸன் 5.8மி.ப., ஸ்வென் கோரன் எரிக்சன் 3.7மி.ப., ஃபபியோ கேப்பெல்லோ 2.8மி.ப., ஆர்சென், வெங்கர் 2.3மில்லியன் பவுண்ஸ் பெறுகின்றனர்.

இதுவரை காலமும் இங்கிலாந்தில் ஸ்வென் கோரன் எரிக்சனே அதிக சம்பளம் வாங்கும் பயிற்றுனராக விளங்கினார். ஆனால் சேர் அலெக்ஸ் அவரைவிட 2மில்லியன் அதிகமாக வாங்கி அவரை மூலையில் தள்ளிவிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (யே)



இத்தாலியின் ஏ.சி.மிலான் கழகத்தின் தலைவர் கார்லோ அன்சலோட்டி அவருடைய கழக வீரர்களால் ஆகாயத்தில் தூக்கி வீசப்பட்டு மகிழ்ச்சி ஆரவாரம் பெறுகிறார். இத்தாலியின் ரோமா கழகத்தை மிலான் அணி இறுதி உதைபந்தாட்டப் போட்டி ஒன்றில் தோற்கடித்தது.

# மாட்டினஸ் தோல்வி

தற்பொழுது ஜேர்மனியில் நடை பெற்றுவரும் ஜேர்மன் பகிரங்க டெனிஸ் சுற்றுப்போட்டியின் ஆரம்பச் சுற்றிலேயே ஸ்பெயின் நாட்டின் பிரபல வீராங்கனை கொஞ்சிற்றா மாட்டினஸ் தோல்வியடைந்தார்.




இன்னும்மொரு ஸ்பெயின் வீராங்கனையான மரியா சஞ்சேஸ் லொறன்சோவிடம் 6-3, 6-3 எனும் நேர் செற்களில் அவர் அதிர்ச்சித் தோல்வியடைந்தார்.

இன்னுமொரு போட்டியில் ஆர்ஜென டீனாவின் பவோலா சோறெஸ் ஸ்பெயினின் அனபெல் மெடினாவை 6-2, 7-5, 6-5 என்ற செற்றில் தோற்கடித்தார். (யே)

# நம்பிக்கையில்லாப் பிரேரணை


சிம்பாப்வேக்கான கிரிக்கெற் சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொள்ள விருக்கின்ற இங்கிலாந்து கிரிக்கெற் அணி தொடர்பான கருத்துக்கள் மற்றும் முறையற்ற அணுகுமுறை தொடர்பாக இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெற் கட்டுப்பாட்டுச்சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரியான றிம்லாம்பிற்கு எதிராக நம்பிக்கையில்லா வாக்கெடுப்பு இடம்பெறவிருக்கின்றது. இந்நிலையில் மேலும் ஓரிருவாரங்களேனும் றிம்லாம் பதவியில் நிலைத்திருப்பது கேள்விக்குறியான விடயம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சிம்பாப்வே அணிக்கெதிராக நடைபெறவுள்ள கிரிக்கெற் சுற்றுப் பயணத்தில் இங்கிலாந்து அணி கலந்து கொள்வது அல்லது தவிர்த்துக் கொள்வது பற்றி றிம்லாம் முறையான அணுகுமுறைகளைப் பின்பற்றவில்லை யெனத் தெரிவித்தே அவர்மீது இந்த நம்பிக்கையில்லா வாக்கெடுப்பு கொண்டுவரப்பட்டதாக இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிபபாக றிம்லாமின் முறையற்ற அணுகுமுறையினால் இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெற் கட்டுப்பாட்டுச்சபை நற்பெயருக்கு பங்கம் ஏற்பட்டுவிடலாம் எனக் கருதியே அவருக்கு எதிராக இந்நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (யே)

# ஒலிம்பிக்கில் டொனா





மூன்று வருடங்களாக காயம் காரணமாக போட்டிகளில் பங்கெடுக்காமல் இருந்த அமெரிக்காவின் பிரபல 400மீற்றர் ஓட்ட வீராங்கனை டொனா ஃரேஷர் அற்புதமான சாதனை ஒன்றை நிகழ்த்தினார்.

நேற்று நடந்த ஒலிம்பிக் தெரிவுப் போட்டி ஒன்றில் 51.49விநாடிகளில் 400மீற்றர் தூரத்தைக் கடந்து அவர் சாதனை நிகழ்த்தினார். ஓகஸ்டில் எதென்சில நடைபெறும் ஒலிம்பிக் போட்டிகளுக்காகத் தயார் செயயும் டொனா எதிர்வரும் ஜூலை மாதத்தில் மஞ்செஸ்டரில் நடைபெறவிருக்கும் பிரித்தானிய மெய்வல்லுநர் போட்டிகளில் பங்குபற்ற மறுத்துவிட்டார். அமெரிக்க மெய்வல்லுநர் சங்க அதிகாரிகள் எவ்வளவு வருநதிக் கேட்டும் அவர் பிடிவாதமாக மறுத்துவிட்டார். (யே)

# நியூசிலாந்திற்கு ஏமாற்றம்

கடும்மழை காரணமாக நியூசிலாந்து அணிக்கும், பிரித்தானிய பல்கலைக்கழக அணிக்கும் இடையில் கேம்பிரிஜில் நடைபெறவிருந்த பயிற்சி டெஸ்ட் போட்டி, ஒரு பந்துகூட வீசப்படாமல் கைவிடப்பட்டது.



அணித்தலைவர் ஸ்ரீபன் பிளமிங் சிறு காயத்திற்குள்ளானதால் கிறிஸ்கெயின் அணிக்குத் தலைமைதாங்க விருந்தார். இங்கிலாந்துடனான போட்டி முடிவடைந்த பின் கெயின்ஸ் டெஸ்ட் வாழ்வில் இருந்து ஓய்வு பெறுவது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஞாயிறு தொழில் ரீதியான கிரிக்கெற் கழகம் ஒன்றுடனான ஒருநாள் போட்டியில் நியூசிலாந்து 28ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இதில் பிளேமிங் 75ஓட்டங்களைப்பெற்றார். இங்கிலாந்துக் கழகத்தின் சார்பாக முன்னாள் மேற்கிந்திய அணித்தலைவர் ஜிம்மி அடம்ஸ் 113ஓட்டங்களை எடுத்தும் அவ்வணி வெற்றிபெற முடியவில்லை. (யே)


# ஸ்னூக்கர் சம்பியன் சலிவன்

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற உலக ஸ்னூக்கர் சம்பியன் பட்டத்திற்கான இறுதியாட்டத்தில் ஓ சலிவன் புதிய உலகச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டார்.



போட்டியின் ஆரம்பத்தில் அவரை எதிர்த்தாடிய கிரேம் டொட் பலரும் வியப்புறும் விதத்தில் அபாரமாக ஆடினார். ஒரு கட்டத்தில் 7-7என்ற புள்ளிகள் அடிப்படையில் அபாரமாக அவர் ஆடியபோது பிரபல வீரர் ஸ்ரீவ் டேவிசை 1986ல் ஜோ.ஜோன்சன் அதிர்ச்சித் தோல்விக்குள்ளாக்கியதைப்போன்ற சம்பவமாக இது இருக்கப்போகிறது. என்று பலரும் கருதினர்.

ஆயினும் ஓ சலிவனின் றொக்கட் தாக்குதல்கள் அவரது கனவைச் சிதறடித்தன. இறுதியல் 18-8 என்ற புள்ளி அடிப்படையில் சலிவன் சம்பியனாக அறிவிக்கப்பட்டார். (யே)



இத்தாலியின் முன்னணி கார்ப்பந்தய அணியான ''பெராரி'' அணிக்கு அண்மையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட புதிய கார்.

# இலங்கை சிம்பாப்வே சமநிலை

இலங்கை அணிக்கும் சிம்பாப்வே ஏ அணிக்கும் இடையே ஹராரேயில் இடம்பெற்ற 3நாள் பயிற்சிப போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்துள்ளது.

இலங்கை அணியைவிட 167 ஓட்டங்கள் குறைவாகப் பெற்றிருந்த சிம்பாப்வே ஏ அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் சிறப்பாகத் துடுபபெடுத்தாடி 8விககெற் இழப்பிற்கு 306 ஓட்டங்களை பெற்றது.

இதில் வெள்ளையின வீரரான கிறீப்பர் 97 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. அணியில் இருந்து வெளியேறியிருந்த கிறீப்பர் மீளவும் தனது துடுப்பாட்டத்தில் பிரகாசித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் மற்றொரு வீரரான ஒக்செயா 89ஓட்டங்களைப் பெற்றார்.

சிறபபாகச் பந்து வீசிய உப்புல் சந்தன 80 ஓட்டங்களுக்கு 4 விக்கெற்றினை வீழ்த்தினார்.



**ஸ்கோர் விபரம்**

சிம்பாப்வே அணி முதலாவது இன்னிங்ஸ் 294 ஓட்டங்கள்

இரண்டாவது இன்னிங்ஸ் 8விக்கெற் இழப்பிற்கு 306ஓட்டங்கள்.

இலங்கை அணி முதலாவது இன்னிங்ஸ்-461ஓட்டங்கள். (யே-121,68)

# விளையாட்டுச் செய்திகள்

# மாம்பழம் பழுத்தால் கிளிக்கு வேம்பு பழுத்தால் காக்கைக்கு

கதிர்காமர் அறிவது!

உங்களைப் பார்த்தால் பரிதாப மா இருக்கின்றது. அதாவது



உங்களுக்கு ஜனாதிபதி சந்திரிகா பிரதமர் பதவியைத் தராததைத் தான் சொல்கிறேன். கடந்த வை உங்களுக்குக் கடிதம் எழுதிய போது உங்களுக்கு இந்த கேவலமான நிலை வரும் என்று எச்சரித்திருந்தேன். சில வேளைகளில் நான் தமிழில் எழுதும் பழமொழிகள் உங்களுக்குப் புரியாமல் போனதோ என்னவோ.

இனிமேல் விடுதலைப் புலிகளுடன் வெளிநாடுகளில் வைத்துப பேச்சுக்கள் நடத்தப்படமாட்டாது என்று வேறு கூறியுள்ளீகள். உண்மைதான் இனிமேல் எந்த முகத்தோடை நீங்கள் வெளிநாடுகளுக்குப் போவீகள். அதுவும் புலிகளை பயங்கரவாதிகள் என்று பரப்புரை செயத நாடுகளில் வைத்து - புலிகளை தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் என்று சொல்லி பேச்சுக்களை நடத்துறது என்றால் கொஞ்சம் கஸ்டமாகத்தான் இருக்கும். **A man who is his own lawyer a fool for his client.** அதாவது எவன் தனக்குத்தானே வக்கீலாக வாதாடுகிறானோ, அந்த வக்கீலின வாடிக்கையாளனுக்கு அவன் ஒரு முட்டாள். உடல் நலம் சரியில்லையென்றால் வைத்தியரிடம் போ. நானே மருத்துவம் பார்ப்பேன் என்றால் உனக்கு நீயே எமன். உங்களை நம்பியிருக்கும் அரசுக்கும், பேரினவாதிகளுக்கும் இது பொருந்தும்.

### பேச வெட்கம்

**What Manchester says today – the rest of England says tomorrow.** மான்செஸ்ரர் நகரம் இன்று என்ன சொல்கின்றதோ அதை நாளை இங்கிலாந்து நாடே சொல்லும் என்பார்கள். புலிகளை பயங்கரவாதிகள் என்று அமெரிக்காவும் இங்கிலாந்தும் சொனனால் உலகமே அவர்களை பயஙகரவாதிகள் என்று சொல்லும் ஒதுக்கும் என்று நினைத்தீகள. ஆனால இன்று நோர்வேயும், ஜேர்மனியும், ஜப்பானும், தாய்லாந்தும், தென் அமெரிக்காவும், என்ன சொல்கின்றது என்று உங்களுக்கு நன்கு தெரியும். அதனால்தான் அந்த நாடுகளுக்குப் போய் புலிகளுடன் பேச்சுக்களை நடத்த உங்களுக்கு வெட்கமாக இருக்கின்றது.

**A rose called by any other name would smell as sweet.** ரோஜாப்பூவை என்ன பெயரில் அழைத்தாலும் அது மணம் பரப்புவது மாறாது. இதை தமிழில் இன்னொரு வகையில் - சங்கு சுட்டாலும் வெண்மைதரும் என்பார்கள். நீங்கள் புலிகளைப் பயங்கரவாதிகள் என்று அழைத்தாலும் அவர்கள் தமிழர்களின் பிரதிநிதிகள் என்பதில் எதுவித மாற்றமும் ஏற்படப்போவதில்லை. இது உங்களுக்கும் உங்களை பிரதமர் பதவியில் இருத்த விரும்பிய ஜே.வி.பிக்கும் பொருந்தும்.

**Who he laughs at scars never felt a wound.** விழுந்து கூட அனுபவம் இல்லாதவன் விழுபபுண் பெற்றவனைப் பார்த்து வேடிக்கையாகச் சிரிப்பானாம். ஜே.வி.பியின் கதையும் இப்படித்தான். புரட்சிக்கும் கிளர்ச்சிக்கும் வித்தியாசம் தெரியாதவர்கள் அவர்கள். ஜே.வி.பியும் முன்னர் ஆயுதம் தூக்கியவர்கள்தானே. புலிகளும் ஆயுதம் தூக்கியவர்கள்தானே. புலிகளுடன் பேசலாம் என்றால் ஏன் ஜே.வி.பியுடன் பேசக்கூடாது என்று கூறியுள்ளீர்கள். கசாப்புக் கடைக்காரனுக்கும், பட்டாளத்தானுகக்கும் வித்தியாசம் இருக்கிறது. ஜே.வி.பியை உள்ளே இழுத்ததில் உங்களுக்குப் பெரும் பங்கு இருப்பதாகக் கூறப்படுகின்றது.

### பொழுது போகவில்லை

**Give a piper a penny, and two penny to leave off.** பொழுது போகவில்லை என்று வீதியில் போகும் பிடில்காரனை பத்து ரூபா கொடுத்து வாசிக்கச் சொன்னால் அவனைப் போகச் சொல்ல இருபது ரூபா கொடுக்க வேண்டிவரும். இதேபோல தான் ஜே.விபிக்கும் நீங்கள் கொடுக்க வேண்டிய விலை இன்னும் அதிகமாகவிருக்கும்.

**If you buy the cow take the tail into the bargain.** மாட்டை விலை பேசும்போது வாலையும் சேர்த்துப் பேசு. ஜே.விபியுடன் ஒப்பந்தம் செய்யும்போது அவர்களின் இனவாதக் கொள்கைகளையும் சேர்த்துத்தான் நீங்கள் ஒப்பந்தம் செய்தீர்கள் என்பதை மறவாதீர்கள். கடந்த தடவை ஜே.வி.பியுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு பின்னர் அவர்களை கழற்றிவிட்டது போல் இம்முறை கழற்றிவிடலாம் என்று மனப்பால் குடியாதீர்கள். **lightening never strikes the same place twice.**

இடி ஒரே இடத்தில் இரண்டு தடவைகள் விழுவதில்லை. நீங்கள் புலிகளை பயஙகரவாதிகள் என்று நாடு நாடாகச் சென்று பிரசாரம் செய்தபோது அதனை 90 வீதமான சிங்களவர்கள் வரவேற்றனர். உங்களுக்கு ஒரு பௌத்த பிக்குக்கூட சிறுநீரகத்தை தானம் செய்தார்.

ஆனால் நீங்கள் பிரதமர் பதவிக்கு நியமிக்கப்படுவதை அதே 90 வீத சிங்களவர்கள் வெறுத்தனர், எதிர்த்தனர் என்பதை மறந்து விடாதீர்கள்.

மாம்பழம் பழுத்தால் கிளிக்கு ஆகும். வேம்பு பழுத்தால் காக்கைக்குத்தான் ஆகும் என்று சொல்வார்கள். நீங்கள் என்னதான் பதவிகளைப் பெற்றாலும் அதனால் தமிழர்களுக்கு எதுவித பயனுமில்லை. அது மட்டுமல்ல உங்களுக்கும் தான். நீங்கள் என்னதான் சிங்களவர்களுக்கு உதவிகள் செய்தாலும், அவர்கள் உங்களை ஒரு கைத்தடியாக அல்லது கோடரிக் காம்பாக அதாவது தமிழர் என்ற மரத்தை வெட்டும் கோடரியின் பிடியாக அந்த மரத்தின் கிளையிலிருந்து உருவான கோடரிப் பிடியாக மட்டுமே பாவிப்பார்கள் என்பது இதிலிருந்து வெளிச்சமாகின்றது.நாய் பாருங்கோ எப்பவும் ஏதோ பெரிசாய் வெட்டிப் புடுங்குறமாதிரி ஓடிக்கொண்டே இருக்கும். ஓர் இடத்திலை நிற்காது. அந்த மாதிரி ஓடித்திரிஞ்சியள் நாடு நாடாய். இப்ப ஒரு இடத்திலை அம்மிக்கல் மாதிரி இருக்கிறியள். அதாலை உங்களுக்கு இதை ஆறுதலாய் சொல்ல முடிந்தது. கடைசியாய் ஒருவிடயம்.

### புரிந்தால் சரி

சந்திரிகா ஆத்தா,ஆடு வளர்த்தா கோழி வளர்த்தா ஆனால் நாயை மட்டும் வளர்க்கவில்லை. ஏன் என்று உங்களுக்கு தெரியும் ஆனாலும் பாருங்கோ - நாய் தன்னுடைய நாக்கைக் கடித்துவிட்டு, நாக்கிலிருந்து வரும் இரத்தத்தை ருசி பார்த்துக்கொண்டு - தனக்குப போட்ட எலும்புத்துண்டிலை இருநதுதான் இரத்தம் வருகுது என்று நினைத்துக்கொண்டு, அந்த இரத்தத்தைச் சுவைத்துக் கொண்டேயிருக்கும். பேய் நாய்.

கடைசியாய் உங்களிடம் ஒரு விடயம். அண்ணன்தான் கூடப் பிறந்தான். அண்ணி கூடப்பிறந்தாளா? என்றொரு எச்சரிக்கை பழமொழி தமிழிலை இருக்கு. கவனம் உங்களை இண்டைக்கு தமிழன் என்று சொல்லி பிரதமர் பதவி தர மறுத்த சிங்களவர் துரோகியென்று சொல்ல கனநாள் செல்லாது. ஏனென்றால் அசல் வீட்டான் பிள்ளை ஆபத்துக்குதவான் என்று சிங்களவனுக்குத் தெரியும். உங்களுக்கு தெரியாதுபோல. அந்த நேரத்திலை உங்களைப் பெத்தெடுத்த தமிழனும், தத்தெடுத்த சிங்களவனும் கைவிட - எள்ளோடு சேர்ந்த எலிப்புழுக்கை மாதிரி

**கனடாவில் இருந்து ரட்ணதுரை**

தூக்கியெறியப்படுவீர்கள்.

**The evil that men do, lives after them.** நீங்கள் செய்யும் பாவங்கள் துரோகங்கள் நீங்கள் மரணித்த பின்னரும் உயிர்வாழும் என்பது ஆங்கிலப் பழமொழி. இது உண்மையோ பொய்யோ - ஒன்று மட்டும் உண்மை. தமிழரின் சரித்திரத்தில் எட்டப்பனும், காக்கை வன்னியனும் இன்னும் வாழ்கின்றனர். புரிந்தால் சரி.

## சமாதானப் பேச்சில் நேரடிப்பங்களிப்பு இலங்கையின் பதிலுக்குக் காத்திருக்கிறோம்

### இந்திய வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு

(சென்னை)

விடுதலைப்புலிகளுடனான சமாதான முயற்சியல் இந்தியா தனது நேரடியான பங்களிப்பைச் செய்ய வேண்டுமென இலங்கை அரசாங்கம் கோரியுள்ளதாக இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிஙகா தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடநத சில தினங்களுக்கு முன்னர் இந்தியாவுக்கு வருகை தந்திருந்த இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இலங்கை அரசாங்கத்தின் இந்த வேண்டுகோளை என்னிடம் எடுத்துக் கூறியிருந்தார்.

இலங்கையிலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் சமாதான முயற்சியில் நோர்வேயின் அனுசரணைப் பணியை வரவேற்றுள்ளன என்றும் அவர் கூறினார்.

ஆனால் சமாதான முயற்சியில இந்தியாவின் நேரடிப்பங்களிப்பு எந்த விதத்தில் இருக்க வேண்மென இலங்கை எதிர்பார்க்கிறது என்ற திட்ட வட்டமான விபரங்களைத் தாம் இலங்கை அரசிடம் இருந்து எதிர்பார்த்திருப்பதாகவும் ஜஸ்வந்சிங்கா கூறியுள்ளார்.

(த)

## விசாரணைகளை இடைநிறுத்த சட்டமா அதிபர் பணிப்பு

(கொழும்பு)

கடந்த பொதுத்தேர்தல் காலத்தின் போது முன்னாள அமைச்சர் ரவி கருணாநாயக்காவின் அலுவலகத்தின் மீது தாக்குதலை மேற்கொண்டு நஷ்டத்தை ஏற்படுத்திய சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகள மேற்கொள்வதை இடைநிறுத்துமாறு சட்டமா அதிபர் உத்தரவு பிறப்பித்துள்ளதாகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நேற்று முன்தினம் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளது.

இதற்கு முன்னர் இந்தச்சம்பவம தொடர்பாக முழுமையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு சட்டமா அதிபரிடம் இருந்து ஆலோசனைகள கிடைத்ததாகக் கொழும்பு பிரதான மஜிஸ்ரேட் நீதிமன்றத்திடம் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் விசாரணைகளை நடத்தத் தேவையில்லையென சட்டமா அதிபருக்காக அரச சட்டத்தரணி மேனகா விஜயசுந்தர குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்குத் தெரிவித்ததாக அந்தத் திணைக்களம் நீதிமன்றததிடம் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக எதிர்வரும் ஜூன் மாதம் 4ஆம் திகதி மேலதிக தகவல்களை நீதிமன்றத்திடம் வழங்குமாறு கொழும்பு மேலதிக நீதிமன்ற நீதிபதி ரஞ்சித் திஸ்ஸநாயக்க குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு உத்தரவிட்டார்.

(உ-121)

## ஆசியப் பிராந்திய ஊடகவியலாளர்கள் அடக்குமுறைக்குள் வாழ்கின்றனர்

### பத்திரிகைச் சுதந்திரங்கள் கண்காணிப்பு அமைப்பு

(யாழ்ப்பாணம்)

ஊடகவியலாளர்களை அதிகபட்சம் அடக்குமுறைகளுக்கு உள்ளாக்கும் பிரதேசமாக ஆசியப் பிராந்தியமே காணப்படுவதாகப் பத்திரிகைச் சுதந்திரங்களைக் கண்காணிப்பதற்கான சர்வதேச அமைப்புத் தெரிவித்திருக்கிறது.

அந்த அடிப்படையில், இவ் அமைப்பு சர்வதேச ரீதியில் மேற்கொண்ட ஆய்வுகளின்படி 200 ஊடகவியலாளர்கள் கடந்த ஒரு வருடத்திற்குள் ஆசியப் பிராநதியத்தில் கைதுசெய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்து வருவதாகவும் சுமார் 20பேர் கொல்லப்பட்டிருப்பதாகவும் நூற்றுக்கணக்கானோர் காணாமல் போயிருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

இவ்வாறாக ஊடக சுதந்திரத்தை மீறி ஊடகவியலாளர்கள் மீது இராணுவ அரசியல் அடக்குமுறைகளைத் திணிக்கும் நாடுகளாக இலங்கை, பர்மா, வங்காளதேசம், நேபாளம், பாகிஸ்தான் ஆகிய நாடுகள் முன்னணியில் இருக்கின்றன என்று அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.

இதைவிட ஆசியப் பிராந்தியத்திலேயே அதிகளவிலான ஊடக உரிமை மீறல்கள் இடம்பெற்று வருவதாக எல்லைகள் அற்ற ஊடகவியலாளர்களுக்கான அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் வேறும்பல அமைபபுக்களும் தமது கண்டனங்களை வெளியிட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-4,62)

## நியமனம்குறித்து விசாரணை

(கொழும்பு)

சட்டங்களுக்கு முரணான வகையில வழங்கப்பட்ட நியமனங்களை ரத்துச்செய்யுமாறு வடமேல் மாகாண சபையின் முதலமைச்சர் அதிகாரிகளுககுப் பணிப்புரை விடுத்துள்ளார்.

குறிப்பாகத் தேர்தல் காலப் பகுதியல் வடமேல் மாகாண சபை போக்குவரத்து அதிகார சபையால் வழங்கப்பட்ட நியமனங்கள் குறித்தே விசாரணைகளை நடத்துமாறு அவர் மாகாண சபையின் பிரதமசெயலாளருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார். (த-121)

## சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்கு முக்கியமான தீர்மானங்கள்

### அமைச்சர் அனுரா தெரிவிப்பு

(கொழும்பு)

உள்ளூர் உல்லாசப் பயணத்துறையின் மேம்பாட்டுக்காக எதிர்காலத்தில் முக்கியமான தீர்மானங்களை மேற்கொள்ளப்போவதாக சுற்றுலாக் கைத்தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜப்பான்நாட்டின் கொச்சி மாநில ஆளுநரை நேற்று முன்தினம் சந்தித்த போது அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

எமது நாட்டைச் சேர்ந்த கூடுதலான உல்லாசப் பயணிகளை இலங்கைக்கு அனுப்பும் சாத்தியக் கூறுகள் பற்றி ஆளுனர் டி.கசிச்சி மட்டோ விளக்கிக் கூறினார்.

ஜப்பானியர்கள் இலங்கையின் புராதன நகரங்களைக் காண்பதற்கும், ஆயுள்வேத மருத்துவ முறைகளைப் பரிசீலிப்பதற்கும் ஆவலுடன் இருக்கின்றார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(உ-121)

## குடிநீர் பாதுகாப்புச் சங்கம்

வலிதென்மேற்கு பிரதேச செயலர் பிரிவில் கட்டுடை காக்கை தீவுப் பகுதிகளில் உள்ள மக்களின் நலன் கருதி அப்பகுதிகளில் குடிநீர் பாதுகாப்புச் சங்கங்கள் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளன.

மானிப்பாய் பிரதேசசபையின உள்ளூராட்சி உதவியாளர் செரமேஸ் மற்றும் அவ்வப்பகுதி சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர், நிர்வாக உறுப்பினர் என பலதரப்பட்டோர் இச்சங்கத்தின ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டனர். (உ-252)

# தரம்-5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

**இல:02** **ஆக்கம்: சுந்தர் வெளியீடு**

**❖ இவ்வினாத்தாளில் 22 வினாக்கள் உள்ளன.**

**(01) பின்வரும் பந்தியை வாசித்துக் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.**

சிங்கத்தைக் காட்டு ராஜா என்றும் விலங்குகளின் அரசன் என்றும் கூறுகின்றோம். புலி, சிறுத்தையைப் போல் சிங்கமும் பூனைக் குடும்பத்தைச் சேர்ந்தது. புலியைத் தவிர பூனைக் குடும்பத்தைச் சேர்ந்த எல்லா விலங்குகளும் வலிமையிலும் கம்பீரத்திலும் சிங்கத்தை விடக்குறைந்தவை. சிங்கத்தின் பரந்த முகமும் பிடரி முடியும தரை அதிரும் கர்ஜனையும் தைரியமும் தான் சிங்கத்தைக் காட்டு ராஜாவாக்கியிருக்கிறது. சிங்கம் கர்ஜித்தால் யானை உட்பட எல்லா விலங்குகளும் பறவைகளும் பயந்து நடுங்கும்.

(i) "அரசன்" என்பதன் ஒத்த கருத்துள்ள சொல் ஒன்றைப் பந்தியில் இருந்து தெரிவு செய்து எழுதுக. (.........................)

(ii) "துணிந்து" என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை பந்தியில் இருந்து . தெரிவு செய்து எழுதுக. (.........................)

(iii) இங்கு கூறப்பட்டுள்ள எல்லா விலங்குகளினதும் பெயர்களை எழுதுக.
(.........................................................................................)

(iv) இவற்றுள் அதிக பலம் மிக்க விலங்கு எது? (.........................)

(v) சிங்கத்தின் ஒலி எவ்வாறு அழைக்கப்படும்? (.........................)

(vi) மேலே கூறப்பட்ட விலங்குகளில் உருவத்தில் மிகப்பருத்தது எது?
(.........................)

(vii) சிங்கம் காட்டு ராஜாவாக ஆவதற்கு அதனிடம் காணப்பட்ட, ஏனைய விலங்குகளிடம் காணப்படாத பண்புகளை எழுதுக?
(.........................................................................................)

(viii) இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லை வைத்து நிரப்புக.
சிங்கம் ஏனைய விலங்குகளை விட மிகுந்த.....................கம்பீரம் உடையது.

(ix) பொருத்தமான முடிக்கும் சொல்லைத் தெரிவு செய்க.
சிங்கத்தின் கர்ஜனையைக் கேட்ட பறவைகளும் விலங்குகளும் பயந்து
(நடுங்கும், நடுங்கின, நடுங்குவன)

(x) இப்பந்தி மூலம் வலியுறுத்தப்படும் கருத்து.
(சிங்கத்தின் வலிமை, புலியின் வலிமை, ஏனைய விலங்குகளின் பலவீனம்)

**(02). பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியம் அமைக்குக.**

(i) சிங்கததினைப்போல ./மிக்க/ புலியும்/ விலங்காகும்/ வலிமை.
(.........................................................................................)

(ii) பரந்த /முடியும்/ உடைய/ சிங்கம்/ முகமும் /பிடரி /பலமான விலங்காகும்.
(.........................................................................................)

**(03)** "நெட்டையான காலுடனே
நீளமான கழுத்துடனே
சுட்டுப் பொசுக்கும் மணலில் கூடச்
சுமையைத் தூக்கிச் செல்லும்."

**இப்பாடல் மூலம் குறிப்பிடப்படும் விலங்கு எது?** (.........................)

**(04). பின்வரும் ஒவ்வொரு சொல்லுக்கும் பொருத்தமான் ஆங்கிலச் சொல்லை (ஆங்கில எழுத்துக்களைப் பயன்படுத்தி) எழுதுக.**

(i) யானை . (.........................) (ii) சகோதரன் (.........................)
(iii) முத்திரை (.........................) (iv) நிறம் (.........................)

**(05). பின்வரும் ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லினதும் கருத்தை எழுதுக.**

(i) **Hand** (.........................) (ii) **Hospital** (.........................)
(iii) **Friend** (.........................) (iv) **Eight** (.........................)

**(06). சரியான விடையைத் தெரிவு செய்க.**

(i) பாடசாலை ஒன்றின் நிர்வாகத்திற்குப் பொறுப்பானவர்.
(1) வகுப்பாசிரியர் (2) அதிபர் (3) மாணவமுதல்வர்

(ii) பேருந்து ஒன்றில் எப்போதும் அவதானிக்க முடிவது.
(1) சாரதியை (2) நடத்துநரை (3) ஆசனத்தை

(iii) தாவரம் ஒன்றில் எல்லாக் காலமும் இருப்பது?
(1) இலை (2) வேர் (3) காய்

(iv) நேற்று மழை பெய்தது எனவே நாளை மழை
(1) பெய்யலாம் (2) பெய்யமுடியாது (3) பெய்கின்றது

(v) 24 மணி நேரமும் சேவை நடைபெறும் ஒரு இடம்
(1) பாடசாலை (2) வைத்தியசாலை (3) வங்கி

(vi) நாம் முத்திரை வாங்குவதற்குச் செல்ல வேண்டிய இடம்
(1) கூட்டுறவுக்கடை (2) வைத்தியசாலை (3)அஞ்சல் அலுவலகம்


(vii) தகவல் தொடர்புசாதனம்
(1) தொலைக்காட்சி (2) தொலைபேசி (3) வானொலி

(viii) "Crow"என்பதன் சரியான தமிழ் வடிவம்
(1) காகம் (2) மைனா (3) கிளி

(ix) காட்டில் வாழும் விலங்கு
(1) நாய் (2) யானை (3) பசு

(x) அச்சுப்பதித்தலுக்குப் பயன்படுத்தக்கூடியது
(1) வெண்டிக்காய் (2) பதப்படுத்திய களி (3) கடதாசி

**(07). கீழே காட்டப்பட்டுள்ள படங்கள் மூலம் காட்டப்படுவன உமது சூழலில் வாழும் சில உயிரினங்கள் ஆகும். அவற்றின் பெயர்களை ஒவ்வொரு உருவின் கீழும் எழுதுக.**



(i) (...............)(ii) (...............)(iii)(...............) (iv) (...............)(v) (...............)

**(08). கீழ்வரும் உருக்கள் சரியாயின் "சரி "எனவும் பிழையாயின் "பிழை" எனவும் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

(i) தேசிக்காய் கோளவடிவப் பொருளுக்கு உதாரணம் ஆகும். (...............)


(ii) சதுரம் ஒன்றின் எல்லாப் பக்கமும் சமம் ஆகும். (...............)

(iii) கோரை ஒருவித்திலைத் தாவரமாகும். (...............)

(iv) பிளாஸ்ரிக் பொருட்கள் விரைவில் உக்கிப் பிரிவடைந்து போகும்.(...............)

(v) தொலைக்காட்சியூடாகத் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளலாம். (...............)

**(09). மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

(i)  அருகே காட்டப்பட்டுள்ள உருவிற்கு
1. 8 விளிம்புகள் உண்டு 2. 8 உச்சிகள் உண்டு
3. 8 முகங்கள் உண்டு 4.மேற்கூறிய யாவும் சரியானவை.

(ii) கீழ்வரும் பொருட்களில் இனிப்புச்சுவை உடையது
(1) தேசிப்பழம் (2) நெல்லிக்காய் (3) மாம்பழம் (4)நாவற்பழம்

(iii) கீழ்வரும் கூற்றுக்களில் தாவரங்களுக்குப் பொருந்தக்கூடியது
(1) எல்லாம் பச்சை நிறமானவை (2) எல்லாம் கிளைவிட்டு வளரும்
(3) எல்லாம் பூக்கும் தன்மை உள்ளவை (4)எல்லாம் வளர்ச்சி அடையும்

(iv) பால் பெறும் நோக்கோடு வளர்க்கப்படும் விலங்கு
(1) பசு (2) எருமை (3) முயல் (4) பன்றி

(v) 'ஆ' என்னும் ஓரெழுத்துச் சொல்லின் பொருள்
(1) நெருப்பு (2) பசு (3) குதிரை (4) விறகு

(vi) தாவரம் ஒன்றின் மிகவும் அழகான பாகம்
(1) இலை (2) பழம் (3) பூ (4) வேர்


(vii) கீழ்வரும் உருக்களில் நான்கு கோணங்களையுடையது எது?
(1) முக்கோணி (2) வட்டம் (3) சதுரம் (4) அறுகோணி

(viii) காலையில் காணும் ஒருவருக்குக் கூறக்கூடியது
(1) **Good night** (2) **Good after noon** (3) **Good evening** (4) **Good morning**

(xi) கீழே தரப்பட்டுள்ள தொடர்புகளில் மிகவும் சரியானது
(1) **4+4 = 5+4** (2) **3x3 = 4x2** (3) **10-2 = 6+2** (4) **15+5 = 20+5**

(x) கீழ்வருவனவற்றில் இசைக்கருவி எது?
(1) ஒலிவாங்கி (2) ஒலிபெருக்கி (3) மத்தளம் (4) ஒலிப்பதியி

**(10). கீழே காட்டப்பட்டுள்ள உருக்களை அவதானிக்க.**




(i) அதிகளவு கட்டங்கள் நிழற்படுத்தப்பட்டுள்ள உரு எது? (................)

(ii) குறைந்தளவு கட்டங்கள் நிழற்படுத்தப்பட்டுள்ள உரு எது? (................)

(iii) இவை யாவற்றிலும் நிழற்படுத்தாது உள்ள கட்டங்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு? (................)

**(11).** பிரதான திசைகளில் ஒன்று வடக்கு ஆகும். ஏனைய மூன்று திசைகளையும் எழுதுக.

(i) (.....................) (ii) (.....................) (iii) (.....................)

**(12).** படித்தராசு ஒன்றில் மூன்று பொருட்கள் நிறுக்கப்பட்டுள்ள .விதத்தை கீழே உள்ள படம் காட்டுகின்றது.




(i) பொருளின் நிறையானது வைக்கப்பட்டுள்ள படிக்கு சமமாக உள்ள நிலை எது? (................)

(ii) பொருளின் நிறையானது வைக்கப்பட்டுள்ள படியிலும் குறைவாக உள்ள நிலை எது? (................)

(iii) பொருளின் நிறையானது வைக்கப்பட்டுள்ள படியிலும் அதிகமாக உள்ள நிலை எது? (................)

**(13)** ஒரு தோட்டத்தைச் சுற்றி முட்கம்பி அடிக்க 1200m நீளமான முட்கம்பி தேவை. இந்தத் தோட்டத்தைச் சுற்றி 6 நிரைகளில் முட்கம்பி அடிக்க எத்தனை மீற்றர் நீளமான முட்கம்பி தேவை?
(.........................................................................................)

**(14)** யாழ்ப்பாணத்தில் இருந்து சாவகச்சேரி நோக்கிச் சென்று கொண்டிருக்கும் மினிபஸ் ஒன்றில் 15 பிரயாணிகள் இருந்தனர். கைதடியில் 5 பேர் ஏற 3 பேர் இறங்கினர். நுணாவிலில் 10 பேர் ஏற 6 பேர் இறங்கினர். இப்போது மினி பஸ்ஸில் உள்ள பிரயாணிகளின் எண்ணிக்கை எத்தனை?
(.........................................................................................)



**(15)** தேங்காய் ஒன்று ரூபா 20ப்படி வாங்கி ரூபா 24 இற்கு ஒரு வியாபர்ரி விற்பனை செய்தார். அவர் 300 தேங்காய்களை விற்பனை செய்வதன் மூலம் அவர் தேங்காய்களை வாங்குவதற்குக் கொடுத்த பணத்திலும் எவ்வளவு ரூபா காசை மேலதிகமாகப் பெறுவார்?
(.........................................................................................)

**(16)** ஒரு ஆண்டில் 12 மாதங்களும் ஒரு மாதத்தில் எப்போதும் 30 நாட்களும் ஒரு நாளில் 24 மணித்தியாலங்களும் இருக்கும் என்னும் அடிப்படையில் ஒரு வருடத்தில் எத்தனை மணித்தியாலங்கள் உண்டு என எழுதுக.
(.........................................................................................)

| 1030,1300, 3900 | 1218, 2900,1300 |
|---|---|
| தொகுதி 1 | தொகுதி 2 |

**(17)** மேலே உள்ள இரண்டு தொகுதியிலும் உள்ள எண்களை கூட்டிப்பார்க்காமலேயே எதன் பெறுமதி கூட்டப்படும்போது உயர்வாக இருக்கும் என எழுதுக (...............)

**(18) கீழே உள்ள உருக்களில் நிழற்படுத்தப்பட்டுள்ள பகுதிகளின் அளவை பின்னமாக எழுதுக.**

(i)  (.....................) (ii)  (.....................)

**(19) பின்வரும் தேவைகளை நிறைவு செய்யப்பயன்படுத்தத் தக்க கருவிகளின் பெயர்களை எழுதுக.**

(i) நிறையை அளத்தல் (.........................................................................)

(ii) நேரத்தை அளத்தல் (.........................................................................)

**(20)** 5,10,15,20,25 (......), (.......) தொடரை அவதானித்து இடைவெளிக்குப் பொருத்தமான எண்ணை எழுதுக.

**(21)** முதலாவது இரட்டை எண்ணை எழுதுக. (...........)

**(22)** 'நான் விரும்பும் தொழில் என்னும் தலைப்பின் கீழ் சரியான எழுவாய் பயனிலைகளுடன் அமைந்த 6 வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது 4 சொற்களையாவது கொண்டிருக்க வேண்டும்

தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
தீவினை என்னுஞ் செருக்கு -குறள்

# வலம்புரி

## குட்டையை குழப்புகிறது ஹெல உறுமய

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சமாதான முயற்சிகளின் ஆரம்ப கட்ட நடவடிக்கையாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர்களுடனான சந்திப்பை அடுத்து தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுடன் நோர்வே தூதுவர் எரிக் சோல்ஹெய்ம் பேச்சு நடத்தியுள்ளார். இருதரப்புடனும் பேச்சு நடத்திய சமாதான தூதுவர் எரிக் சொல்ஹேய்ம் இருதரப்பு பேச்சுக்கள் குறித்தும் திருப்தி வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் இலங்கைக்கு வருகைதந்துள்ள நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் ஜனாதிபதியையும், பிரதமரையும் சந்தித்த பின்னர் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை சந்தித்து இருவருடனும் நடத்திய பேச்சுக்களின் விபரங்களை எடுத்துக் கூறியிருந்தார்.

அவற்றை செவிமடுத்த சு.ப. தமிழ்ச்செல்வன் சமாதான பேச்சுக்களை முன்னெடுப்பதில் தமது தரப்பில் இருக்கக்கூடியதான விருப்பை வெளிப்படுத்தியதோடு சமாதான பேச்சுக்களை விட்ட இடத்திலிருந்தே தொடர வேண்டும் எனவும், சமாதான பேச்சுக்களுக்கு எதுவித வரையறைகளும், நிபந்தனைகளும் விதிக்கலாகாது எனவும் தெளிவுபடுத்தியுள்ளார்.

ஆக, புதிய அரசின் சமாதான முயற்சி தொடரப்பட வேண்டுமாயின், ஏற்கனவே விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால சபைத்திட்ட வரைபில் இருந்தே அது ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இணங்குவதாக இருந்தால் மட்டுமே அரசு–புலிகள் பேச்சை மீண்டும் ஆரம்பிக்க முடியும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைப் பொறுத்த வரை விடுதலைப்புலிகளால் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால சபை திட்டவரைபில் இருந்து பேச்சுக்களை ஆரம்பிப்பதில் எதுவித தடையும் இருக்க நியாயமில்லை. ஏனெனில் ஐக்கிய தேசிய முன்னணி அரசுடன் புலிகள் நடத்திய பேச்சுக்களை அடுத்தே இடைக்கால சபைத் திட்டவரைபு முன்வைக்கப்பட்டது.

புலிகளால் முன்வைக்கப்பட்ட திட்டவரைபில் இருந்து பேச்சுக்களை தொடர்வதற்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசும் தயாராக இருந்தது. அவ்வகையில் முன்பிருந்த அரசினால் புலிகளின் திட்டவரைபிலிருந்து பேச்சுக்களை ஆரம்பிக்க முடியுமெனில், அரசுக்கு அது இடைஞ்சலாக இருக்கமுடியாது.

அதேவேளை பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக் காலத்தில் வெளிவிவகார அமைச்சராக இருந்த லக்ஷ்மன் கதிர்காமர் புலிகளுடன் சமாதான பேச்சுக்கள் இடம்பெற்றபோது விடுதலைப்புலிகள் தமது தீர்வுத்திட்டத்தை எழுத்து மூலம் முன்வைக்க வேண்டும். அப்போதுதான் அதிலிருந்து பேச்சுக்களை ஆரம்பிக்கமுடியும் என்று கூறியிருந்தார்.

அவரின் கூற்றுப்படி, இப்போது விடுதலைப்புலிகளால் இடைக்காலசபைத் திட்ட வரைபு முன்வைக்கப்பட்டுள்ளது, எனவே அதிலிருந்து பேச்சுக்களை ஆரம்பிப்பதில் இட்டல், இடைஞ்சல்கள் இருக்க நியாயமில்லை.

ஆனால், அரசினால் முன்வைக்கப்படும் சமாதான முயற்சிகளை குழப்புவதில் ஹெல உறுமய கட்சி மிகத் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. சமாதான் முயற்சிகளை குழப்புவதற்கு வசதியாக ஜே.வி.பி. மீது சில குற்றச்சாட்டுக்களை சுமத்துவதோடு, கடந்தகால நிகழ்வுகளையும் ஞாபகப்படுத்திவிடுகிறது.

அதில் ஒரு விடயமாக, நோர்வேயின் தேசியக் கொடியை எரித்த ஜே.வி.பி. இப்போது மட்டும் ஏன் அமைதியைக் கடைப்பிடிக்கின்றது எனக் கேள்வியை தொடுத்துள்ளது. இவ்வாறு கேள்வியைத் தொடுப்பதன் மூலம் விரும்பியோ, விரும்பாமலோ சமாதான விடயத்தில் மௌனத்தை கடைப்பிடிக்கும் ஜே.வி.பி யை, சமாதான முயற்சிக்கு எதிராகத் தூண்டி விடுவதில் ஹெலஉறுமய ஈடுபட்டு வருகிறது இத்தகைய நடவடிககைகள் சமாதான முயற்சிகளை பாதித்துவிடுமோ என்ற அச்சம் ஏற்படவே செய்கிறது.


# தமிழர் கோரும் தீர்வை அரசு வழங்குவதே புத்திசாலித்தனம்

## மாவை எம்.பி. தெரிவிப்பு

(வவுனியா)

தமிழர்களுக்கான நல்லதொரு தீர்வை முன்வைப்பதே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிற்கு நன்மை பயக்கும் என தமிழத் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணத்தின் கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழா நேற்று முன்தினம் வவுனியா இந்து இளைஞர் மன்ற கலாசார மண்டபத்தில் இடம் பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.



அங்கு தொடர்ந்தும் உரைநிகழ்த்திய மாவை சேனாதிராஜா,

தமிழீழ விடுதலைப் புலிகளை ஏகப்பிரதிநிதிகளாக ஏற்று கடந்த தேர்தலில் போட்டியிட்ட எம்மை தமிழ் மக்கள் பெரும்பான்மையாக ஆதரித்து வெற்றி காணச் செய்திருக்கிறார்கள்.

இதனால் புலிகளைத் தமது ஏகப்பிரதிநிதிகளாக ஏற்றுள்ள தமிழ் மக்களின் அபிலாஷைகளின் அடிப்படையில் புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக சபையின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்கள் தொடரப்பட வேண்டும்.

இதன் மூலம் சுய நிர்ணய உரிமையுடன் தாயகப் பகுதிகளில் வாழ்வதற்கான உரிமை தமிழ் மக்களுக்கு வழங்கப்படல் வேண்டும். இதனையே நாம் புதிய அரசிடம் வலியுறுத்தி வருகின்றோம்.

இதனை ஏற்று நடந்து கொள்வதே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆட்சிக்கு நல்ல பயனைத் தரக் கூடியது. மாறாக நடந்து கொண்டால், விரும்பத்தகாத சம்பவங்களை எதிர்கொள்ள நேரிடலாம்.

தமிழ்த் தரப்பு தற்போது உள்ளது போன்றே தொடர்ந்தும் பலத்துடன் இருப்பதற்கு அனைவரது ஒத்துழைப்பும் அவசியம் எனவும் அவர் மேலும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (உ-4,63)

## இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை வெளிவரும் 'கூத்தரங்கம்'

செயல்திறன் அரங்க இயக்கம் கடந்த மார்ச் மாதம் 'கூத்தரங்கம்' என்னும் சஞ்சிகையை அறிமுகப்படுத்தியது. இவ் சஞ்சிகை இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவையாக வெளிவருகினறது. தற்போது இக் கூத்தரங்கத்தின் இரண்டாவது வெளியீடு வெளிவந்துள்ளது.




'கூத்தரங்கம்' முற்றிலும நாடகம் தொடர்பான விடயங்களையே உள்ளடக்கமாகக் கொண்டு வெளிவருகினறது. இவ் சஞ்சிகை உள்ளடக்கத்தில் ஈழத்து தமிழ் நாடகம் பற்றிய செய்திகள், கட்டுரைகள், நேர்காணல், கருத்துரைகள், விமர்சனங்கள் என்பன முக்கியமான இடத்தைவகிக்கின்றது.

இந்த வகையில் முதலாவது அளிக்கையில் ஈழத்து மூத்த நாடகக் கலைஞர் ஏ.ரி. அரசு அவர்களது நேர்காணலும், சமகாலத்தில் நடைபெற்ற நாடகச் செயற்பாடுகளில் உள்ளடக்கம் பெற்ற தே.தேவானந்தின் 'முடக்கம்' நாடகம் பற்றிய விமர்சனக் கட்டுரையும், நாடகம் தொடர்பான செய்திகளும், அனுபவப்பகிர்வும் இடம்பிடித்தன.

இந்நோக்கிலே 2வது அளிக்கையில் ஈழத்து மூத்த எழுத்தாளர் கவிஞர் இ.முருகையனுடனான நேர்காணலும், பெண்கள் அரங்க ஆற்றுகையான 'கல்லின் கசிவு' நாடகத்திற்கு இலக்கியா எழுதிய விமர்சனப் பார்வையும், பேராசிரியர் சபா ஜெயராசா எழுதிய குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்களின் நாடக வழக்கு நூல் தொடர்பான விமர்சனமும், தி.செல்வமனோகரன் எழுதிய 'நெஞ்சுறுத்தும் கானல்' இரு நாடகங்கள் என்ற புத்தகத்தின் அறிமுகக் குறிப்பும், தற்காலத்தில் இடம்பெறும் அரங்க நடவடிக்கைகள் பற்றிய செய்திகளுடன் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜாவின் கருத்துரையும் இடம்பெற்றுள்ளன.

இந்த வகையில், நாடகத் துறை சார்ந்தவர்களுக்கு இச் சஞ்சிகை வெளியீடானது மிகவும் பயனுடையதாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஈழத்து தமிழ் நாடக வரலாற்றில் இவ்'கூத்தரங்கம்' சஞ்சிகை வெளியீடும் முக்கியமானதாகும். இதன் ஆசிரியர் குழுவாக தே.தேவானந்த், க.இ.கமலநாதன், அ.விஜயநாதன், கு.லஷ்மணன் ஆகியோர் செயற்படுகிறார்கள்.

கூத்தரங்கத்திற்கு அரங்க மாணவர்கள், நாடக ஆசிரியர்கள், நெறியாளர்கள், ஆய்வாளர்கள் தங்கள் ஆக்கங்களைப் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். கூத்தரங்கை செயல்திறன் அரங்க இயக்க அலுவலகத்திலும், யாழ்.புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். கூத்தரங்கம், செயல்திறன் அரங்க இயக்கம், அருளகம், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (உ)

## தினசரி தியானம்

### ௐ விவேகச் சிந்தனைகள்

வாழ்வின் இலட்சியம் என்ன? இந்த உலகம் தான் வாழ்க்கையின் இலட்சியமா? வேறு ஒன்றும் இல்லையா? நாம் இப்போது இருப்பது போல் தான் இருக்கவேண்டுமா? இதறகு மேலாக இருக்கவேண்டாமா? எந்தத தடையும் இல்லாமல் சுலபமாக ஓடுகின்ற ஒரு இயந்திரமாக இருக்க வேண்டியவன் தானா மனிதன்?

சுவாமி விவேகானந்தர்

## இராணுவ ஆய்வாளரின் வீட்டில் இரவு வேளையில் தேடுதல்

(கொழும்பு)

இலங்கையின் இராணுவ ஆய்வாளரும், பிரபல ஊடகவியலாளருமான ரி. சிவராமின் வீடு நேற்றுமுன்தினம் இரவு கடுமையான சோதனைக்கு உள்ளாக்கப்பட்டது.

இரவு 8.00 மணி முதல் 9.00 மணிவரையில் கொகுவலை மற்றும் கல்கிஸை காவல்துறையினர் இணைந்து மேற்கொண்ட இந்தத் தேடுதலின் பொழுது அவர் வீட்டில் இருக்கவில்லையென்றும், மட்டக்களப்பிற்கு பணி நிமித்தமாக செனற வேளையிலேயே இந்த தேடுதல் சம்பவம் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அவருடைய மனைவி தற்போது தேடுதல்கள் இடம்பெறாத வேளையில், தமது வீடு மட்டும் சோதனைக்குள்ளாக்கப்படுவது குறித்து ஆட்சேபனை தெரிவித்தபோது, தகவல் ஒன்றின அடிப்படையிலேயே இந்தத் தேடுதலை தாம் மேற்கொள்வதாகப் பொலிஸார் அவருக்குப் பதிலளித்தனர்.

இதேவேளை, தமது அடையாளத்தையும் அவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

ஊடகவியலாளர் சிவராமிற்கு ஏற்கனவே இனந்தெரியாத தரப்புக்களிடமிருந்து பயமுறுத்தல்கள் விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-121)

## மாத்தளை மாவட்ட எம்.பிக்கள் இருவர் மீது விரைவில் விசாரணை

(மாத்தளை)

கடந்த பொதுத்தேர்தல் சமயத்தில் மாத்தளையில் கைது செய்யப்பட்ட பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்தவாகள் எனச் சந்தேகிக்கப்படும் 11 பேர் நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களை எதிர்வரும் 17ஆம் திகதி வரை தடுப்புக் காவலில் வைக்குமாறு மாத்தளை பிரதான மஜிஸ்திரேட் உத்தரவு பிறப்பித்தார். சந்தேக நபர்கள் அம்பலாங்கொட பிரதேசத்தைச் சேர்ந் தவர்கள். தேர்தல் வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுவ தற்காக இவர்கள் மாத்தளைக்கு வந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

அவர்களிடம் இருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் ரஞ்சித்அலுவிகார, அலுக்அலுவிகார ஆகியோர் விசாரிக்கப்படவுள்ளனர். (உ-121)

## 'மௌன தரிசனம்' நூல வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி ஆசிரியர் வி.ஜெயபாலின் 'மௌன தரிசனம்' கவிதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழா இன்று பி.ப. 3.00 மணிக்கு யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. அதிபர் வன்னியசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில கவிஞர் சோ.பத்மநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

நிகழ்வில் வரவேற்புரையை ந.ரமணனும், ஆசியுரையை முன்னாள் கல்விப் பணிப்பாளர் கோ.சி. வேலாயுதமும், வாழ்த்துரையை யாழ். கோட்டக் கல்விப்பணிப்பாளர் எஸ். தங்கராசாவும் நிகழ்த்த, நூல் வெளியீட்டுரையை ஆசிரியர் ந. விஜயசுந்தரமும் ஆய்வுரையை கலாநிதி செ.திருநாவுக்கரசும் பதிலுரையை நூலாசிரியர் வி. ஜெயபாலும் நிகழ்த்துவர். (ந)

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்
களுக்கும் பார்சல் சேவைகளுக்கும்
MANOJ EXPRESS SERVICE
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
இல.13, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
யாழ்.: 021 222 3916, 0777 801038
கொழும்பு: T.P.: 2390128, Fax: 2399650, Mob: 0777 517019

## சமாதான முயற்சிகள் வெற்றிபெறும்

# நோர்வேயின் அனுசரணையை இந்திய அரசு வரவேற்றுள்ளது

### எரிக்சோல்ஹெய்ம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதியும், விடுதலைப் புலிகளும் சமாதான முயற்சிகள் விரைந்து ஆரம்பிக்கப்படுவதில் அக்கறை உடையவர்களாக இருப்பதால் சமாதான முயற்சிகள் வெற்றிபெறும் என்று நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சோல் ஹெய்ம் நம்பிக்கை வெளியிட்டு ளார்.

தமிழ் கூட்டமைப்பு எம்.பிகளுட னான சந்திப்பின் போதே சோல் ஹெய்ம் மேற்கண்டவாறு நம்பிக்கை வெளியிட்டார்.

இலங்கையின் இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதில் இந்தியா மிகத் தெளிவாக உள்ளது அதற்கான நோர்வேயின் அனுசரணை முயற்சியை அது வரவேற்றுள்ளது.

இந்நிலையில் இந்தியா சமாதான பேச்சுவார்த்தைக்கு தனது முழுமையான ஆதரவை வழங்க தயாராக இருப்பதாக தெரிவித்த சோல்ஹெய்ம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமாதான முயற்சிகளை ஆரம்பிக்க வேண்டும் எனக் கொண்டுள்ள அக்கறையை விடுதலைப் புலிகளிடம் எடுத்துக் கூறினோம். அவர்களும் அதற்கு இணக்கம் தெரிவிததுள்ளனர்.

இந்நிலையில் ஜனாதிபதியும் விடுதலைப்புலிகளும் சமாதான முயற்சியில் அக்கறை கொண்டிருப்பதால் விரைவில் பேச்சுவார்தைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (இ)

## ஒன்றுபட்ட இலங்கைக்குள்ளேயே இனப்பிரச்சினைக்கு தீர்வு வேண்டும்

### இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஷ்வந் சின்ஹா

(சென்னை)

இலங்கையின் சமாதான செயற்பாட்டில் இந்தியா எவ்வகையான பங்களிப்பை வழங்குவது என்று இலங்கையிடம் கேட்டிருக்கின்றோம் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஷ்வன்சின்ஹா சென்னையில் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் புதிய வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை கடந்த வாரம் புதுடில்லியில் சந்தித்தபோது இலங்கையின் சமாதான செயற்பாட்டில் இந்தியா நேரடியாக பங்குகொள்ள வேண்டும் என அவர் எம்மைக் கேட்டிருந்தார். அதற்கு நான் இந்தியா எந்தவகையிலான பங்களிப்பை வழங்க வேண்டும் என அவரிடம் கேட்டிருந்தேன் அதுபற்றி தான் தனது அரசாங்கத்துடன் கலந்துரையாடிய பின்னர் கூறுவதாக கதிர்காமர் என்னிடம் உறுதியளித்திருந்தார்.

இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வு ஒன்றுபட்ட இலங்கைக்குள் ஏற்பட வேண்டும் என்பதையே இந்தியா விரும்புகிறது. முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கு விவகாரத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை நாடு கடத்தும்படி இந்தியா கோரியதா எனக் கேட்டதற்கு அவர் இது பற்றி இலங்கை அரசிடம் பல தடவைகள் கேட்கப்பட்டுள்ளது என்றார். (இ)

## நோர்வே வெளிவிவகார ....

பார் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் தலைமையிலான நோர்வே தூதுக்குழு ஜனாதிபதியுடனும், எரிச்சோல் தலைமையிலான குழுவினர் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுடனும் முதற்கட்ட சந்திப்புக்களை நடத்தியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

விடுதலைப் புலிகளினதும், அரசினதும் சமாதானம் தொடர்பான நிலைப்பாடுகளை நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் மற்றும் எரிக்சோல் ஹெய்ம் ஆகியோருடன் விரிவாக ஆராய்ந்த பின்னரே நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் இலங்கைவரவுள்ளார். (ச)

## கலாநிதி அன்ரன்...

அரசின் சமாதான நகர்வுகளுக்கு புலிகளின் தலைமைப்பீடம் எடுக்கவுள்ள முடிவுகள் மற்றும் திட்டங்கள் குறித்தும் இச் சந்திப்பின் போது ஆராயப்படும் என்று தெரியவருகிறது.

சமாதான முயற்சிகளை ஆரம்பிக்கும் முன் முயற்சிக்கான வருகையாகவே கலாநிதி பாலசிங்கத்தின் விஜயம் அமைவதாக அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை எதிர்வரும் திங்கட் கிழமை வன்னிக்கு வருகைதரவுள்ள நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சனை, அன்ரன் பாலசிங்கம் சந்தித்து பேச உள்ளதாகவும் கூறப்படுகின்றது (ச)

## புலிகளுக்கான ....

புலிகளுக்கு தெரிவிக்கும் என்று வெளிவிவகார அமைச்சர் லக்ஷன் கதிர்காமர் தெரிவித்து ள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் பதவியேற்றபின் ஆரம்பித்துள்ள சமாதான பேச்சுவார்த்தையின் முதற்கட்ட நடவடிக்கையாக நோர்வே தூதுக் குழுவினர் மூலமாக விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி இருந்தது.

இத் தொடர்பின் ஆரம்பக் கட்ட நடவடிக்கையாக நேற்று முன்தினம் ஜனாதிபதி தனது விசேட செய்தி ஒன்றை விடுதலைப் புலிகளுக்கு நோர்வே விசேட தூதுவர் எரிக்சோல் ஹெய்ம் மூலமாக அனுப்பி வைத்திருந்தார்.

இச் செய்திக்கு விடுதலைப் புலிகள் தெரிவித்த கருத்துக்களையே அரசாங்கம் தீவிரமாக பரிசீலித்து முடிவுகளை விடுதலைப் புலிகளுக்கு அறிவிக்கும் என்று அமைச்சர் கதிர்காமர் தெரிவித்துள்ளார். (ம)

## 5ம் தர புலமைப் பரீட்சை வினாத்தாள் ~02

மாணவர் முழுப்பெயர்: ..................................

பாடசாலை முகவரி : ..................................

வீட்டின் முகவரி : ..................................

மாணவர்களே! உங்கள் விடைகளை 10.05.2004இற்கு முன் அனுப்பி வைக்கவும். உங்கள் விடைகளுடன் கூப்பனையும் வெட்டி இணைக்கவும்.

வலம்புரி
கல்விப்பகுதி,
15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

குறிப்பு :- மாணவர்களின் நலன்கருதி இவ் வினாத்தாள்களை வைத்துக்கொண்டு, வினாக்களுக்கான விடைகளை வேறு ஒரு தாளில் எழுதி கூப்பனுடன் சேர்த்து அனுப்பவும். வினா இலக்கங்களை சரியாகக் குறிப்பிடவும். பாட

## நீரில் மூழ்கி போராளி சாவு

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு கடற்பரப்பில் போராளி ஒருவர் நீரில் மூழ்கி சாவடைந்துள்ளார்.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றுள்ளது.

லெப்டினன்ட் இலக்கியன் (அகஸ்ரின் வசந்தரூபன், சிவசுந்தரம் வீதி, வட்டக்கச்சி) என்ற போராளியே சாவடைந்தவராவார். (ச)

## மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் பலி

(மருதங்கேணி)

மின்சாரம் தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் பலியாகியுள்ளார். இச்சம்பவம் நேற்று கரவெட்டியில் இடம்பெற்றுள்ளது. அதே இடத்தைச சேர்ந்த இரத்தினம் இரட்ணேஸ்வரன் (வயது 45) என்பவரே பலியானவராவார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

பிரஸ்தாப நபர் குளித்துவிட்டு தனது ஈர ஆடைகளை மின்சார வயரில் காயவிட முற்பட்ட போதே மின்சாரம் தாக்கியதாக தெரிய வருகிறது. (உ-35,150)

## கொள்ளையர் பலி

பண்டாரவளை பொலிசார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் கொள்ளைக் கோஷ்டியைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சமபவம் நேற்று வெளிமடைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி நபர் வெளிமடை பிரதேசத்தில் இருந்து லொறி ஒன்றை கடத்திச்செல்ல முயற்சித்துள்ளார். அதன்போது பொலிசார் அவரை பிடிக்க முயன்றபோது அவர் தப்பியோடினார். அந்தச் சமயத்தில் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். அதன்போது அந்த நபர் உயிரிழந்தார் என பொலிசார் தெரிவித்தனர். (ச-61,10)

## கைதிகள் விடுதலை

(கொழும்பு)

வெசாக் தினத்தை முன்னிட்டு ஆயிரத்து 750 சிறைக்கைதிகள் நேற்று பொதுமன்னிப்பு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்

ஜனாதிபதியின் சிபார்சின் பேரிலேயே இவர்கள் விடுதலை செய்யபட்டுள்ளனர். விடுதலை செய்யப்பட்டவர்களுள் சட்டவிரோதமாக இத்தாலிக்கு செல்ல முற்பட்ட இருநூற்று 69 இளைஞர்களும் அடங்குவர்.

சிறைக்கைதிகளை விடுதலை செய்யும் நிகழ்வினை முன்னிட்டு வெலிக்டை சிறைச்சாலையில் விசேட மதவழிபாடுகள் இடம் பெற்றது. (இ-121)

## இலங்கையில்..

புலிகளின் விருப்பமாகும்.

இந்நிலையில் சமாதான பேச்சுவார்த்தை தொடர்பிலான அடுத்தகட்ட நடவடிக்கைகளை அரசாங்கமே முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பது குறித்து அமைச்சர் கதிர்காமர் மூலம் ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறியுள்ளதாகவும் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹேய்ம் தெரிவித்துள்ளார். (ம-121)

## இடைக்கால ...

பின்ர், இதனை ஜனாதிபதி தனது ஆட்சியை நீடித்துச் செல்லவும், அரசியல் ஸ்திரத் தன்மையை உறுதிப்படுத்தவும் வெளிநாடுகளிடம் இருந்து சமாதான முயறசியை பயன்படுத்தி நிதி வசூலிப் பதற்கும் ஒருபோதும் பயன்படுத்தக் கூடாது என்றும் அதனை சமாதான அனுசரணையாளர்கள் அங்கீகரிக்கக் கூடாது என்றும் கோரிக்கை விடுத்தனர்.

இச் சந்திப்பில் எரிக்சோல்ஹெய்முடன் இலங்கைக்கான நோர்வே தூதுவர் கான்பிறஸ்கர் மற்றும் தூதராலயச் செயலாளர் ஆகியோரும், கூட்டமைப்பு எம்.பிக்கள் சார்பில், இரா.சம்மந்தன், சுரேஸ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், கிஷோர், ம.க. ஈழவேந்தன், ஜோசப் பரராஜசிங்கம் பத்மினி சிதம்பரநாதன்,கனகசபை ஜெயானந்தமூர்த்தி ஆகியோரும் கலந்து கொண்டனர். (இ)




இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.05.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.